# நான் நானல்ல

## 1

இருபது வருடங்களுக்கு முன்பு நடந்த ஒரு முன் கதையை பார்த்து விடுவோமா?

சேலம் மாவட்டத்தில் இருக்கிறது சேர்வராயன் மலை. இதில் ஒரு பாகம்தான் ஏற்காடு. இன்னொரு பாகத்தில் இருக்கிறது கல்வராயன் மலை.

இந்த இரண்டுக்கும் நடுவில் அடிவாரச் சருக்கத்தில் ஆனந்தர் காடு என்றும் ஒன்று இருந்தது.

பரமானந்தம் என்பவர் பரமானந்தராக மாறி குடும்பம் குட்டி என்கிற லௌகீக வாழ்க்கையே 'வேண்டாம் என்று தீர்மானித்து ஒதுங்கிக் கொண்ட இடம்தான் அந்தக் காடு. பின்னால் அவர் பெயரால் பரமானந்தர் காடாகி அதற்கும் பின் ஆனந்தர் காடாகி விட்டது.

காடு என்றவுடன் சிங்கம் புலி நடமாட்டங்களை கற்பனை செய்து கொண்டு விடாதீர்கள். செடியும் கொடியுமாய் நொணா, வேங்கை, கருவேலம் என்கிற சாதாரண ஜாதி மரங்களின் கூட்டத்தோடு ஒரு வற்றாத சுனையும் உள்ள இடம்தான் ஆனந்தர் காடு.



சுப்பராயக் கவுண்டர் என்பவருக்கு சொந்தமாக இருந்தது கிட்டத்தட்ட அறுபது ஏக்கர் நிலப்பரப்பு. அவர் பரமானந்தரின் சிஷ்யராகி தன் நிலத்தை எல்லாம் பரமானந்தருக்கே கொடுத்து விட்டு வைகுண்டத்திற்கு போய்ச் சேர்ந்து விட்டார்.

அதன் பின் பரமானந்தர் அங்கே சுப்பராய கவுண்டருக்கும் ஒரு பிருந்தாவனம் அமைத்து தன் ஆஸ்ரமத்தையும் விஸ்தாரமாக போட்டுக் கொண்டார்.

ஆஸ்ரமத்தில் மூச்சுப் பயிற்சி, யோகாசனங்கள் என்று ஆஸ்ரம சமாச்சாரங்களும் தான் பறந்தன. பரமானந்தரும் ஜாதி மத பேதம் என்று எதையும் பார்க்காமல் எல்லோருக்கும் ஆன்மீக ஞானத்தை அள்ளி வழங்கினார் என்று தான் சொல்ல வேண்டும்.

இதில் வாசி யோகம் என்னும் மூச்சுப் பயிற்சி மிகப் பிரதானம். இதை ஒருவர் ஒருமுறை அனுபவித்தால் கூட போதும். அதன் பின் அவர் பெரிய அளவில் மாறத் தொடங்கி விடுவார்.

இப்படிப்பட்ட பயிற்சியை சிறையில் ஒரு கொலைக் குற்றத்துக்கான தண்டனைக் காலம் முடிந்து திரும்பிய கலியபெருமாளும் பெற்றுக்கொண்டான். ஆஸ்ரமத்திலேயே தங்கி இருந்து பரமானந்தருக்கு கை கால் பிடித்து விட்டு அவரது அணுக்க தொண்டனாகவும் ஆகிவிட்டான்.

இந்த நிலையில்தான் வாசுதேவன் என்கிற ஒரு பிராம்மண இளைஞனை பரமானந்தரிடம் அழைத்து வந்தார் அவன் அப்பா. வாசுதேவன் கல்லூரியில் பி.ஏ. படித்துக் கொண்டிருப்பதாக கூறிய அவன் அப்பா, அந்தப் படிப்பில் எல்லாம் எனக்கு நம்பிக்கையே இல்லை. நீங்கள் இவனுக்கு யோகங்களை சொல்லித் தாருங்கள் என்று கூறிவிட்டு போய் விட்டார்.

பரமானந்தரும் அவனுக்கு எல்லா யோகங்களையும் சொல்லிக் கொடுத்தார். ஆசனங்களில் மட்டும் ஒரு

நாற்பது இருக்கிறது. அதன்பின் மூச்சுப் பயிற்சி, அதற்கும் பின் மனவளக்கலை மௌனப்பியாசம் என்று அவனது வித்தை கற்கும் வேகமும் விருத்தியடைந்து கொண்டே போனது.

ஒருநாள் அந்த ஆஸ்ரமத்திற்கு ஒரு சக்தி உபாசகர் ஒருவர் வந்தார். பரமானந்தருக்கு அவரை கட்டோடு பிடிக்காது. பரமானந்தரோடு பேசிக் கொண்டிருந்தவர் 'அஷ்டமா சித்தி' பற்றியும் பேசினார். அதை வாசுதேவனும் கேட்டபடி அருகில் இருந்தான். பரமானந்தர் தனக்கு அஷ்டமாசித்தியை அடைவதில் பெரிதாக ஆர்வமில்லை என்று கூறி விட்டார். ஆனால் அந்த சக்தி உபாசகரோ சித்திகளிலேயே உயர்வானது அஷ்டமா சித்திகள்தான். அதை அடைந்து விட்டால் போதும் உலகமே நம் காலடியில் என்கிற மாதிரி பேசினார். பேச்சோடு நில்லாமல் தன் பெருமையை பரமானந்தர் உணர வேண்டும் என்பதற்காக அவர் எதிரிலேயே தன் அஷ்டமா சித்தியை காட்டவும் தொடங்கி விட்டார். வாசுதேவன் அவர் மேல் வைத்த விழியை எடுக்கவில்லை. வெறித்தபடி இருந்தான். அவரும் அணிமா, மகிமா என்று ஒவ்வொன்றாக விளக்கி அதில் தன் ஈடுபாட்டையும் சாதுர்யத்தையும் காட்டினார்.

உச்சமாக காற்றில் மிதந்தார். கண்ணால் அங்குள்ள ஆஸ்ரம கடிகாரத்தை கிறுக்குப் பிடித்த மாதிரி சுற்றவும் வைத்தார். இதெல்லாம் நடந்து கொண்டிருந்தபோது ஆஸ்ரமப் பசு இறந்து விட்டதாக தகவல் வந்தது.

பரமானந்தர் பதறிப் போய் விட்டார். அந்த சக்தி உபாசகரோடு எழுந்து ஆஸ்ரமக் கொல்லையை நோக்கி ஓடினார். வாசுதேவனும் பின் தொடர்ந்தான். கொல்லையில் ஆஸ்ரமப் பசு கோமாரி நோய் கண்டிருந்த நிலையில் உயிரை விட்டிருந்தது. பரமானந்தர் துடித்துப் போய் விட்டார். அதைப் பார்த்துக் கொண்டிருந்த சக்தி உபாசகர் இதென்ன பிரமாதம். இந்த பசுவுக்கு நான் உயிர் தருகிறேன் பாருங்கள். என்று ஒரு இடத்தில்



போய் காலை நீட்டிக் கொண்டு சவாசனம் புரிகிறவர் போல படுத்தார்.

கொஞ்ச நேரத்தில் அவர் உடம்பில் உயிர் இல்லை. ஆனால் அருகில் கிடந்த பசு மாடானது காலை உதைத்துக் கொண்டு எழுந்து நின்றது. பரமானந்தரே வியப்பின் உச்சிக்குப் போய் விட்டார். அந்தப் பசுவும் பரமானந்தரை சுற்றி வந்து தலையை அசைத்து அவரைப் பார்த்தது. வாசுதேவனால் துளிகூட அந்தக் காட்சியை நம்ப முடியவில்லை. கண்கள் அகண்டு விரிந்தது. விரிந்த மாதிரியே நின்று விட்டது. அதன் பின் மீண்டும் அந்தப் பசு கீழே படுத்து சவமானது. சவமாட்டம் அருகில் கிடந்த உபாசகரும் கண் விழித்து எழுந்து வந்தார்.

பரமானந்தரை எப்படி என்கிற மாதிரிப் பார்த்தார்.

"அட என்னய்யா நீ... உன்னை யார் அது உடம்புல நுழையச் சொன்னது. அதுக்கு உயிர்கொடுக்க வழி இருந்தா அதைச் செய்யலாமுல்ல...?" என்று பரமானந்தரும் செல்லமாக சடைத்துக் கொண்டார்.

"அதுக்கு அந்த பிரம்மாவுக்கே அதிகாரம் கிடையாது. நான் யார்" என்று திருப்பிக் கேட்ட உபாசகர். 'இதெல்லாம் வித்தை... அபார வித்தை... அன்னை சக்தியின் அருளால் வசப்பட்ட வித்தை' என்று கண்களைச் சிமிட்டினார்.

உடனே வாசுதேவன் அவரைப் பார்த்து "ஸ்வாமி எனக்கு இதெல்லாம் வசப்படுமோ?" என்று கேட்டான். "அதுக்கு உன் ஜாதகத்துல இடம் இருக்கணும். அப்புறமா உன் உடம்பு ஒத்துழைக்கணும். அப்புறமா மனசு, அவயவங்கன்னு ஒவ்வொண்ணும் ஒத்துழைக்கணும்" என்று அவர் ஏதேதோ சொன்னார்.

"எல்லாம் ஒத்துழைக்கும், எனக்கு வைராக்யம் இருக்கு. அடைஞ்சா இப்படிப்பட்ட வித்தைகளை அடையணும். இல்லேன்னா உயிர் வாழ்வதிலே அர்த்தம் இல்லை" என்றான்.

உபாசகர் அவனை கூர்மையாகப் பார்த்தார்.

"சரி வா... என் கோவணத்தை முதல்ல தோச்சு போடணும். போடுவியா" என்றுதான் கேட்டார்.

வாசுதேவன் ஒரு விநாடி கூட தாமதிக்கவில்லை.

"அதுக்கென்ன ஸ்வாமி..." என்று அவர் பின்னாலேயே போகத் தொடங்கி விட்டான். ஒரு பெரிய வக்கீல் வீட்டுப் பிள்ளை இப்படி தற்செயலாக வந்த ஒரு உபாசகரின் பின்னே போனால் பரமானந்தர் தான் சும்மா இருப்பாரா? அவர் தடுக்கப் பார்த்தார்.

"வாசு... வேண்டாம்! இவர் நிலை வேற; உன் நிலை வேற... இதெல்லாம் கண்கட்டு" அவர் அப்படிச் சொல்லவும் உபாசகருக்கு கோபம் வந்து விட்டது.

"பரமானந்தம்... எது கண் கட்டு? இது சக்தி வித்தை. தெரிஞ்சுக்கோ."

"இருக்கட்டுமே. வாசு ஒரு படிக்கற பையன். அவன் மனசுல இப்படியா பாதிப்பை உருவாக்குவே?"

"நல்ல விஷயங்கள் எவ்வளவு வேணும்னாலும் பாதிக்கலாம். தப்பு இல்லை. தெரிஞ்சுக்கோ."

"வேண்டாம்யா. உன் மார்க்கம் வேற. இவன் மார்க்கம் வேற. யோகாசனத்தால நான் உடம்பு மனசுக்கு தெம்பைத் தரேன். நீ அஷ்டமாசித்தின்னு ஆசை காட்றே. ஆசைக்குரிய விஷயங்கள் ரொம்ப ஆபத்தானது."

"ஆசையை ஆளத் தெரிஞ்சா ஒரு ஆபத்தும் இல்ல. பராசக்தி கிட்ட கேட்டா அவ அதையும் கொடுப்பா."

"இருக்கட்டும். அதுக்கு ஒரு வயசு இருக்கு. தயவு செய்து அந்த பையனை விட்டுட்டு கிளம்பு. உன் சித்து வேலைகளை இனிமே இந்த மாதிரி ஆஸ்ரமங்களுக்கு வந்து காட்டாதே."

பரமானந்தர் பேச, பதிலுக்கு அந்த உபாசகர் பேச ஒரே ரகளையாகி விட்டது. பார்த்துக் கொண்டிருந்த



வாசுதேவன் அதுவரை பரமானந்தரிடம் காட்டி வந்த மரியாதையை உதறி விட்டு கத்தத் தொடங்கினான்.

"அனந்தரே... இது என் சொந்த விஷயம். இதுல நீங்க தலையிட வேண்டாம்!"

"இருக்கலாம். இவருக்கு வசப்பட்டது எனக்கு மட்டும் வசப்படாதா?"

"இங்க நீ பார்த்ததே மாயை. உனக்குத் தெரியலை. நான் யோகி. எனக்கு நல்லது கெட்டதை பிரிச்சுப் பார்க்க முடியும். அதை வெச்சு சொல்றேன். இந்த விஷயத்துக்கு ஆசைப்படாதே."

"நீங்க இப்படிச் சொல்லச் சொல்ல எனக்கு ஆசை அதிகமாகி கிட்டே போகுது. வாழ்க்கையில எதையாவது பெரிசா சாதிக்கணும்னு நினைக்கற எனக்கு இதெல்லாம் தான் வேணும்."

"வாசுதேவன் அழிச்சாட்டியமாக பேசிவிட்டு அந்த உபாசகர் பின்னால் போயே போய் விட்டான். பரமானந்தர் சாதாரணமாய் எதற்கும் கவலைப்பட மாட்டார்.

ஆனால் அன்று வாசுதேவனுக்காக மிகவும் கவலைப் பட்டார். கல்லூரியில் படித்து வந்த அவனை அவன் அப்பா விஸ்வநாதன் காரணமில்லாமல் ஆனந்தர் காட்டுக்கு அனுப்பவில்லை.

கல்லூரியில் கஞ்சா பழக்கம் எப்படியோ அவனைத் தொற்றிக் கொண்டு விட்டது. உடம்பு துரும்பாய் இளைக்க விஸ்வநாதன் அவனை அந்த போதைப் பழக் கத்தில் இருந்து மீட்க படாதபாடு பட்டார். எப்படியோ அரை குறையாக தேற்றி விட்டார். நிரந்தரமாக தேற வேண்டுமானால் யோகாப்பியாசங்கள் தான் அவனை காப்பாற்றும் என்று யாரோ சொல்லித்தான் ஆனந்தர் காட்டுக்கு அவனை அனுப்பி வைத்தார். முழுவதுமாய் திருந்துவதற்கு வந்தவன் இப்படி ஒரு பேராசையில் விழுந்து உபாசகர் பின்னால் போய் விடுவான் என்று அவர் எதிர்பார்க்கவேயில்லை.

விஷயம் தெரிந்து விஸ்வநாதனும் வந்து பரமானந்தரைப் பார்த்து வருத்தப்பட்டார். அப்போது அவன் ஜாதகம் பற்றியும் பேசினார்.

மிக ஜாக்கிரதையாக அவனை பாதுகாக்காவிட்டால் அவன் மிகப் பெரிய கொடுமைக்காரனாக, உலகமே நடுங்கும் ஒருவனாக ஆகி விடுவான் என்று ஜோதிடர் கூறியதையெல்லாம் கூறினார்.

பரமானந்தருக்கும் உடம்பும் மனசும் அதைக் கேட்டு பதறியது. அந்த உபாசகனை ஆஸ்ரமத்தில் அனுமதித்தது தவறு என்று வருத்தப்பட்டு ஆஸ்ரமத்தில் உள்ள ஆன்மலிங்க சன்னதி முன் போய் நின்று வருத்தப்பட்டார்.

அந்த ஈசன்தான் அந்த உபாசகனிடம் இருந்து வாசதேவனை காப்பாற்ற வேண்டும் என்றும் பிரார்த்தனை செய்தார்.

சாதாரணமாகவே பிரார்த்தனைகள் மகத்தான சக்தி படைத்தவை. அதிலும் நமக்காக இல்லாமல் பிறருக்காக பிரார்த்திக்கும் போது பிரார்த்தனையின் வீர்யம் பலமடங்கு அதிகரிக்கிறது.

அதிலும் பரமானந்தர் போன்ற யோகிகள் பிரார்த்திக்கும் போது அதற்கு பலனில்லாமல் போகுமா? அது பலனளித்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

## 2

ரயில் நிலையத்தில் உபாசகரோடு நின்று கொண்டிருந்தான் வாசதேவன். அவரது ஜோல்னாப் பையையும் மரப் பெட்டியையும் இப்போது அவன் சுமந்து கொண்டிருந்தான். அவரிடம் தயங்கித் தயங்கி அவர் பெயரைக் கேட்டான்.



சிரித்தபடி அவரும் தன் பெயரை பிரம்மசித்தன் என்று கூறிக் கொண்டார்.

"இப்ப நாம எங்க போறோம் சாமி...?"

"மாயவரத்துக்கு..."

"எதுக்குப் போறோம்?"

"எப்பவும் சிஷ்யன் குருவை கேள்வி கேட்கக் கூடாது. நான் போய் கிணத்தில் குதின்னா யோசிக்காம குதிக்கணும். "அதுதான் நல்ல சிஷ்யனுக்கு அழகு" என்றார்.

"தப்பு சாமி..." என்று கன்னத்தில் போட்டுக் கொண்டவனை தாடியை நீவிக் கொண்டு பார்த்தார். அப்பொழுது ஒருவர் கமகமவென்று வாசம் மணக்க டிபன் வாங்கிக் கொண்டு எங்கேயோ போய்க் கொண்டிருந்தார். அதைப் பார்த்த வாசதேவனுக்கு நாக்கில் ஜலம் ஊறியது.

"என்னப்பா... பசிக்குதா?"

"ஆமாம் சாமி..."

"என்ன வேணும் சாப்பிட?"

பிளாட்ஃபாரத்தில் நின்று கொண்டு ஏதோ ஒரு ஹோட்டலுக்குள் அமர்ந்து கொண்டு கேட்கிறவராட்டம் கேட்டார்.

"இங்க என்ன சாமி கிடைக்கும்?" அவன் திரும்ப எதிர் கேள்வி கேட்டான்.

"இப்பதானே சொன்னேன் எதிர் கேள்வி கேட்காமே. கேட்ட கேள்விக்கு மட்டும் பதில் சொல்லுன்னு..."

"சாப்பிட எது கிடைச்சாலும் சரி சாமி."

"எது கிடைச்சாலும்னா... இட்லி, தோசை, பூரின்னு எது வேணும். விபரமா சொல்லு."

"மூணுமே கிடைச்சாலும் சரி..."

"சரி... ஒரு பத்து நிமிஷம் பொறுத்துக்கோ... வரும் பார்."

அதன் பின் அவர் சொன்ன மாதிரிதான் ஆயிற்று. யாரோ ஒருவர் வியர்க்க விறுவிறுக்க ஒரு பெரிய பையோடு அவர்களை நோக்கி வந்தார். அந்த உபா சகரைப் பார்த்து,

"சாமி டிபன் இருக்கு. சாப்பிட்டீங்களா?" என்றும் கேட்டார்.

"இவன்கிட்ட கொடு..." என்றார் அவரும் கொடுத்து விட்டு, "அப்ப நான் வரேன் சாமி" என்று வந்த சுவடு தெரியாமல் போய் விட்டார். மீண்டும் பிரமிப்பு வாசுதேவனிடம்...

"சாமி, எப்படி சாமி. இப்படியெல்லாம் நடக்குது? நீங்க ஏற்கனவே சொல்லி வெச்சிருந்தீங்களா?"

அவர் பதில் சொல்லாமல் சிரித்தார். அவனும் பையைத் திறந்து பொட்டலங்களை தொட்டுப் பார்த்தான். இளம் சூட்டில் கமகமவென்று அவன் கேட்ட இட்லி தோசை பூரி வகையறாக்கள்.

"போ... போய் அப்படி உக்காந்து சாப்பிட்டு..." என்றார். அதே போல் சற்று தள்ளி இருந்த சிமெண்ட்டு பெஞ்சில் உட்கார்ந்து சாப்பிட்டு விட்டு வந்தான்.

"டிபன் சாப்பிட்டே... ஒரு காபி சாப்பிட்டா நல்லா இருக்கும்ல?"

அவன் தலை ஆடியது. அடுத்த இரண்டாவது நிமிடத்தில் பிளாட்ஃபாரத்தில் காபித்தூக்குடன் ஒருவன் வந்து ஒரு காகித தம்ளரில் காபியை ஊற்றி அவனிடம் நீட்டி விட்டு எதுவும் பேசாமல் திரும்பிப் போனான்.

எல்லாமே மாயமாய், மர்மமாய் இருந்தது.

ரயிலும் வந்தது.

அதில் முதல் வகுப்புப் பெட்டியாய் பார்த்து ஏறினார். டிக்கெட்டும் எடுக்கவில்லை. டி. டி. வந்தால் நிச்சயம் ஆயிரக்கணக்கில் ஃபைன் போடுவார் என்றுதான் நினைத் தான். ஆனால் டி. டி. அவர்கள் பக்கமே வரவில்லை.



உபாசகர் ஜன்னல் வழியே வெளியே பார்த்துக் கொண்டே வந்தார்.

வாசுதேவனால் எதையுமே நம்ப முடியவில்லை. காண்பது கனவா. இல்லை நிஜமா என்று சந்தேகம் வந்தது. நெடுநேரம் சந்தேகத்தில் ஊசலாடியவன் அடக்க மாட்டாமல் வாயைத் திறந்தான்.

"சாமி... கேக்கறேனேன்னு தப்பா எடுத்துக்காதீங்க. இதெல்லாம் எப்படி நடக்குது?"

"எப்படின்னா?"

"டிபன் வந்தது. காபி வந்தது. யாரும் காலணா கேக்கலை. டி.டி.யும் டிக்கெட் கேட்டு வரலை. எனக்கு புரியலை..."

"உனக்கு இப்ப புரியாது. ஆனா போகப் போக புரியும்."

"புரியுமா?"

"புரியும்... புரிஞ்சா தானே உனக்கு சித்திகள் வசப்படும்."

"அந்த சித்திகளுக்கு அப்படி ஒரு சக்தியா?"

"இல்லையா பின்னே... அஷ்டமாசித்தியா கொக்கா...?"

"அப்ப இதை ஏன் பரமானந்தர் கண்கட்டுன்னு சொன்னார்?"

"அவர் அப்படித்தான். அவருக்கு பொறாமை."

"சரி... இதை எப்படி வசப்படுத்தினீங்க?"

"எனக்கு ஒரு குருநாதர் இருக்கார். அவர் மூலமா..."

"அவர் இப்ப எங்கே?"

"அவர் சமாதியாயிட்டார்."

"இது எப்படி... தமிழ் இங்கிலீஷ். ஹிஸ்ட்ரி ஜாக்ரபி மாதிரி சப்ஜெக்டா?"

"அப்படியும் சொல்லலாம்..."

"அப்படின்னா ஏன் இதை யாரும் கத்துக்க மாட்டேங்கறாங்க?"

"விதி இல்லை கத்துக்கலை..."

"ஆச்சரியமாயிருக்குதே. ஒரு வேலையும் செய்யாம இதைக் கொண்டு வாழலாம் போல இருக்கே?"

"வாழலாம்... வாழலாம்... விரும்பற பெண்ணை வசீகரிக்கலாம். அடுத்தவங்க மனசுல இருக்கறத படிக்கலாம். நாம நினைக்கற மாதிரி மத்தவங்களை நடக்க வைக்கலாம்."

"அப்ப ஸ்டேஷன்ல நடந்துகிட்டவங்கல்லாம் நீங்க நினைக்கற மாதிரி நடந்தவங்களா?"

"ஆமாம்... ஆமாம்..."

"அப்ப நீங்க மனசு வெச்சா பிரதம மந்திரியாகவே ஆயிடலாம்னும் சொல்லுங்க."

"நான் இப்ப இந்த உலகத்துக்கே ராஜா... பிரதம மந்திரி ரொம்ப அல்பமானது."

"இதை எப்படிக் கத்துக்கறது?"

"குருவோட உபதேசத்தோட நிறைய பயிற்சிகள் செய்து கத்துக்கணும்."

"ரொம்ப கஷ்டமோ?"

"ரொம்ப ரொம்ப கஷ்டம்..."

"நான் கத்துக்குவேனா?"

"பார்க்கலாம்."

"இந்தப் பைல, பெட்டில என்ன இருக்கு?"

"இந்த பயிற்சிகளை எப்படி எடுக்கறதுங்கறதுக் கான வழிமுறை கொண்ட ஏடுகள், புத்தகங்கள்."

"இது உங்களுக்கு எப்படி கிடைச்சிச்சு...?"



"போதும்... நீ கேள்வி கேட்டது போதும். கொஞ்சம் பேசாம வா. நான் இப்ப இருந்து மூணு நாளைக்கு பேசமாட்டேன். இன்னும் கொஞ்சம் நேரத்துல எனக்கு சந்திராஷ்டமம் ஆரம்பம். என்னையும் பிடிச்சு ஆட்ற ஒரு விஷயம் இந்த சந்திராஷ்டமம்."

"அப்படின்னா?" வாசுதேவன் அவரிடம் தன் ஞான விசாரணையை விடுவதாக இல்லை.

"சந்திராஷ்டமம்கறது சந்திரன் மறையற ஒரு விஷயத்தைச் சொல்ற பேர் அது..."

"சந்திரன் மறையற விஷயமா... புரியலை எனக்கு சந்திரன் எங்க மறையறான்?"

"ஆரம்பிச்சுட்டியா... சந்திராஷ்டமம் வந்தாலே இப்படித்தான். என்னைச் சுற்றி இருக்கறவங்க என்னை படுத்த ஆரம்பிச்சுடுவாங்க. நான் படாதபாடு படுவேன்."

"நான் ஒண்ணும் உங்களைப் படுத்தலை குரு. சந்திராஷ்டமம்னா என்னன்னு தெரிஞ்சுக்கத்தான் கேக்கறேன்." வாசுதேவன் குரு என்று கூப்பிட்ட உடன் பிரம்மசித்தன் என்று தன்னை சொல்லிக் கொண்ட அந்த மனிதருக்கு கொஞ்சம் தேனை நக்கினாற் போல இருந்தது. அவரது அடி மனதில் தான் பரமானந்தா போல ஒரு குருஸ்தானத்தை அடைய வேண்டும் என்கிற ஆசை மண்டிக் கிடந்தது. ஆனால் அவரை ஒரு சித்து விளையாட்டுக்காரராக மாயாவியாகத்தான் பலரும் நினைத்தார்கள். யாரும் ஒரு குருவாக ஆசிரியராக நினைக்கவேயில்லை. அப்படி இருக்க, வாசுதேவன் பின் தொடர்ந்து வந்ததோடு குரு என்றும் கூப்பிடவும் உச்சி குளிர்ந்து விட்டது. அவனைப் பார்த்து சலித்தவர் இப்பொழுது சிரித்தார்.

"பரவாயில்லை வாசுதேவா... உன்கிட்ட நிறைய ஆர்வம் இருக்கு. ஏன் எதுக்கு அப்படிங்கற கேள்விகளும் உனக்குள்ள நிறையவே இருக்கு. நான் உன்னைப் பாராட்டறேன்" என்றார்.

"சந்தோஷம் குரு சந்திராஷ்டமத்துக்கு விளக்கம் தாங்கோ..."

"விளக்கம்தானே... கேட்டுக்கோ. சந்திராஷ்டமத்துக்கு விளக்கம் தெரியணும்னா உனக்கு முதல்ல வான சாஸ் திரம்னா என்னன்னு தெரியணும். அதைப்பத்தி சுருக்கமா சொல்றேன்.

நமக்கெல்லாம் தெரிஞ்சது இந்த பூமி. அப்புறமா ஆகாயத்துல சூரிய, சந்திரன்... அதுக்கும் பிறகு

"ஆமாம்..."

"ஆகாயத்துல இந்த சூரிய சந்திரர்கள் இல்லாம பலப்பல கிரகங்களும் இருக்கு..."

"வீனஸ், புளூட்டோ, நெப்ட்யூன்னு சொல்வாங்களே அவைகளா?"

"ஆமாம், எனக்கு இங்கிலீஷ்ல சொன்னா தெரியாது. தமிழ்ல சொல்றேன். கேட்டுக்கோ. சூரியன் சந்திரன் நீங்கலா செவ்வாய், புதன், சுக்கிரன், சனி, ராகு, கேது, குருவாகிய வியாழன்னு மொத்தம் ஒன்பது கிரகம் இருக்கு. இந்த ஒன்பது கிரகங்களோட சேர்க்கைதான் நம்ம உடம்பும் கூட."

"ஆச்சரியமா இருக்கே?"

"ஆச்சரியப்பட்டாலும், படலைன்னாலும் இதுதான் உண்மை. இந்த ஒன்பது கிரகங்களோட சுழற்சிக்கு ஏற்ப தான் நம்ம பிறப்பு, வளர்ப்பு, வாழ்க்கை, சிந்தனை, மரணம், எல்லாமே நடக்குது..."

"அப்ப நான் இப்படி கேள்வி கேட்கக்கூட இவைதான் காரணமா?"

"நிச்சயமா... நீ இப்படி கேள்வி கேட்க, வான சாஸ்திரம் பற்றி தெரிஞ்சுக்க, உன் வாக்கு ஸ்தானத்துல செவ்வாய் இருக்கணும். ஞானகாரகன் கேதுவும் ஒரு தூண்டுதலா இருக்கணும்."

"சரி சந்திராஷ்டமம் பற்றி சொல்லுங்க..."



"சொல்றேன். சந்திரன்தான் நம்ம உடம்புல மனோ காரகனா இருக்கறவன். அதாவது சந்திரன் தான் எல்லா ருக்குமே மனசா அமைஞ்சிருக்கறவன். இவன் எப்படி இருக்கான்கறத வெச்சுத்தான் நம்ம மனவளம் தீர்மான மாகுது. இவன் ஒவ்வொரு ராசியிலேயும் ஒருநாள் இரண்டுநாள், இரண்டரை நாள்னு பயணம் செய்யறவன். அந்த பயணத்துல நம்ம ராசிக்கு எட்டாவது வீட்டுக்குள்ள இவன் பயணிக்கும்போது, அந்த வீட்டை விட்டு அவன் போகிற வரை நம் வரையில் அவன் மறைஞ்சவனாயிட் டான். குளுமையான சந்திரன் இப்படி மறைஞ்சா நம் மனசும் சாந்தமா இருக்காது. கோபமும் தாபமும் அந்த நாள்ல அதிகரிக்கும். அதனால செயல்ல பட படப்பும் டென்ஷனும் இருக்கும். சுருக்கமா சொல்லப்போனா மனசுல நிம்மதி போயிடும். நிற்கும் மதியாலதான் நிம்மதியே வருது. அது மறைஞ்சா நிம்மதி இல்ல. இப்ப புரிஞ்சுதா?"

"இப்படி எத்தனை நாளைக்கு?"

"சரியா சொல்லணும்னா இப்ப இருந்து கிட்டதட்ட நாற்பது மணி நேரத்துக்கு எனக்கு சந்திராஷ்டமம். இந்த நாற்பது மணி நேரமும் என் மனசுக்குள்ற சந்திரன் இல்லாம போய் நான் கொதிச்சுப் போயிடுவேன். வம்பு, வழக்கு, சண்டை, சச்சரவும் இந்த நேரத்துல எனக்கு நிகழும்."

"இது எல்லாருக்கும் பொருந்துமா?"

"மனசுன்னு ஒண்ணு யாருக்குல்லாம் இருக்கோ... அவங்க அவ்வளவு பேருக்கும் மாசத்துல இரண்டு நாள் இப்படி சந்திரன் மறைஞ்சு நிம்மதி குறையும்."

"அப்ப அந்த இரண்டு நாள் யாரா இருந்தாலும் ஜாக்ரதையா இருக்கணுமா?"

"நிச்சயமா... இருந்தாலும் சிலருக்கு இது பெரிய அளவுல பாதிப்பு தராது. மழைல நனைஞ்சுகிட்டிருக்கற ஒருத்தர் சின்ன மழைல நனைஞ்சாலும் பெரிய மழைல

நனைஞ்சாலும் அவர் நனையற அளவு மாறப் போற தில்லையே?

பெரும்பாலும் நிம்மதி இல்லாம கஷ்டப்பட்றவங் களுக்கு இந்த இரண்டு நாள் சந்திரன் மறைஞ்சுட்டுப் போறதே தெரியாது."

பிரம்மசித்தர் சொன்ன உதாரணம் வாசுதேவனுக்கு ஓரளவுதான் புரிந்தது. ஆனால் ஒண்ணு மட்டும் நன்றாக புரிந்தது.

சந்திரன்தான் மனது. அவன், ஒருவர் ஜாதகத்தில் சரியில்லை என்றால் ஜாதகர் மனசும் சரியாக இருக்காது. தன் வரையில் சந்திரன் எப்படிப்பட்டவன்? தெரிந்து கொள்ள ஆவலாக இருந்தது.

"எனக்கு எப்ப சந்திராஷ்டமம்னு நான் தெரிஞ்சுக்க லாமா?"

"உன் ராசியை சொல்லு, உனக்கு எப்போன்னு நான் சொல்றேன்."

"என் ராசி... நட்சத்திரம்... எதுவும் தெரியாதே?"

"வேண்டாம். தெரிய வேண்டாம். இதை தெரிஞ்சுக் காம இருக்கறதுதான் நல்லது."

"தெரிஞ்சா அந்த இரண்டு நாள் நான் எச்சரிக்கையா இருப்பேனே...?"

"அப்ப போய் உன் அப்பா அம்மாகிட்ட இருந்து உன் ஜாதகத்தை கேட்டு வாங்கிட்டு வா. அதைப் பார்த்துட்டு சொல்றேன்.

"இதுக்காக நான் வீட்டுக்கு போனா என் அப்பா என்னை அப்புறமா வெளிய விடமாட்டார். அவர் வரைல நான் ஒரு ட்ரக் அடிக்ட். ஆகையால என்னை அவர் ஜெயில்ல போட்டாப் போல பிடிச்சு வெச்சுக்கதான் விரும்புவார்."



வாசுதேவன் சொன்ன பதில் பிரம்ம சித்தரை அவனைக் கூர்ந்து பார்க்க வைத்தது. பின் கேள்வியும் கேட்க வைத்தது

"நீ ட்ரக் அடிக்டா...?"

"ஆமாம் குரு... தெரியாத்தனமா அதுக்கு அடிமை ஆகிட்டேன்."

"இப்பவுமா?"

"இல்ல... இப்ப இல்ல... பரமானந்தர்கிட்ட யோகம் கத்துக்கத் தொடங்கின உடனே அந்த உணர்ச்சி கட்டுப்பாட்டுக்கு வந்துடுச்சு."

அவன் பதில் பிரம்மசித்தரை தாடையைத் தடவவிட் டது. ரயில் பாட்டும் போய்க் கொண்டே இருந்தது. வாசுதேவன் என்னவோ ஏதோ என்று கவலையில் உழலத் தொடங்கி விட்டான்.

"குரு... ஏன் ஒரு மாதிரி ஆயிட்டீங்க?"

"உன்னைப் பத்திதான் யோசிக்கிறேன்."

"என்னைப் பத்தி யோசிக்க என்ன இருக்கு குரு?"

"எவ்வளவோ இருக்கு... உன்னை எந்த கணக்குல சேக்கறதுன்னு எனக்கு தெரியலை."

"அப்படின்னா..."

"போதைப் பழக்கம் ஒரு சிற்றின்பப் பழக்கம். அதுக்கு அடிமையாயிட்ட உன்னால அஷ்டமாசித்தியை அடைய முடியுமான்னு யோசிக்கிறேன்."

"அப்ப என்னால முடியாதா?"

"மனசு அடங்காத யாருக்கும் எந்த வித்தையும் வசப்படாது."

"நான் தான் இப்ப திருந்திட்டேன்னு சொன்னேனே."

"தப்பு செய்யறது. அதன்பின்னே திருந்தறதெல்லாம் ஒரு விதம். சக்தி வித்தை ஒண்ணும் சராசரியான விஷயம் கிடையாது."

"சக்தி வித்தையா?"

"ஆமாம். சக்தி வித்தை தான் அஷ்டமா சித்தி. அந்த தேவி பராசக்தி ஒரு பக்தனுக்கு பிச்சை போடற விஷயம் இது. அவ எனக்கே அவ்வளவு கைபத்துல படியளக்கல. சத்தல்ல விட்டா, இப்ப கூட எனக்கு மதிப்பான பேர் கிடையாது. பல ஊர்ல, என்னை மாயக்காரன்னுதான் சொல்வாங்க..."

"குரு... நீங்க என்னென்னமோ சொல்றீங்க. நான் உங்களை நம்பித்தான் வந்துருக்கேன். வாழ்க்கைல வித்தியாசமா எதையாவது சாதிக்க நினைக்கறேன். அதுக்கு அஷ்டமாசித்திதான் எனக்கு ஒரே வழின்னு தோணுது. நான் என்ன விலை கொடுத்தாலும் அதை அடையத் தயாரா இருக்கேன்."

"விலை கொடுத்து வாங்க அது ஒண்ணும் கடைச் சரக்கு கிடையாது வாசுதேவா. அது நாம நம்மையே பணயமா வெச்சு வாங்கற ஞானம்."

"என்ன செய்யணும் சொல்லுங்க. நானும் என்னையே பணயமா வைக்கறேன்."

"பதட்டமோ அவசரமோ படாதே. இந்த சித்திகளை நீ எதுக்காக அடைய நினைக்கறேன்னு சொல்ல முடியுமா?"

"எதுக்காக... எல்லாம் ஒரு வித்தியாசத்துக்காகதான்."

"வித்தியாசம் என்ன பெரிய புடலங்கா வித்தியாசம்."

"அது... அது... உக்காந்த இடத்துல எல்லாத்தையும் அடையலாம் இல்லியா... அதுக்காகத்தான்."

"எப்படி?"

"இப்ப நீங்க டிபனை எனக்கு காசு கொடுத்தா வாங்கிக் கொடுத்தீங்க. அதுதானா தேடி வரலை? அந்த மாதிரி வரவைக்கன்னு வெச்சுக்குங்களேன்."

"அப்ப உனக்கு உழைச்சுப் பிழைக்கறதுல இஷ்டம் இல்லை. அப்படித்தானே?"



"எனக்கு குரு கேள்வி இது... நீங்க என்ன விறகு வெட்டி மூட்டை தூக்கியா பிழைக்கறீங்க... உங்களை மாதிரி நான் ஆனா போதும்..."

"என் உழைப்பு எப்படிப்பட்டதுன்னு உனக்குத் தெரியுமா?" பிரம்மசித்தர் குரலில் சற்று கடுமை கூடியது. பார்வையிலும் அன்பு விலகி ஒருவித குரூரம் பரவ ஆரம்பித்தது.

"உங்ககிட்ட உழைப்பா... ஆச்சரியமாயிருக்கே?" வாசுதேவன் தோளைக் குலுக்கி சிரித்தபடியே திருப்பிக் கேட்டான். அவன் கேட்ட விதத்தில் துளிகூட மரியாதையோ, பணிவோ இல்லை. அதுவே அவன் பிரம்மசித்தரை மிகச் சாதாரணமாகத்தான் மதிக்கிறான் என்று சொல்லாமல் சொன்னது.

பிரம்மசித்தருக்கும் தனது சந்திராஷ்டமம் வாசுதேவன் உருவில் மன வேதனை அளிக்கத் தொடங்கிவிட்டது புரிந்து போயிற்று. அவன் கேள்விக்கு பதிலைச் சொல்லாமல் ஜன்னல் கம்பிகள் வழியாக வெளியே பார்த்தார்.

அடர்ந்த இருளில் அங்கும் இங்குமாய் வயல்வெளிகளில் சில ட்யூப்லைட் வெளிச்சங்களும் அவை பம்ப் செட் மோட்டார் அறைகள் என்கிற புரிதலும் தோன்றியது. ரயிலிடமும் ஒரு அசாத்ய வேகம்.

"என்ன குரு... பதில் சொல்ல மாட்டேங்கறீங்க..." வாசுதேவன் காலை மடக்கி சப்பணமிட்டு அமர்ந்தவனாக பிரம்மசித்தரை உசுப்பிவிட்டான்.

"நீ ஒரு நல்ல சிஷ்யன்னு நினைச்சேன். ஆனா அப்படி இல்லேங்கற மாதிரியே கேள்விகளைக் கேட்கறே. உன்னைப் பார்த்தா எனக்கு பரிதாபமா இருக்கு..."

"இப்படி மனசுல இருக்கறதை பளிச்சின்னு சொன்னா நான் நல்ல சிஷ்யன் இல்லையா?" திரும்பவும் எக்களிப்புச் சிரிப்புடன் வாசு கேட்டான்.

"பொடிப்பயல் நீ. சித்திகளைப் பத்தி ரொம்ப சாதாரணமா நினைச்சிட்டே. இதை அடைய எவ்வளவு சிரமப்படணும் தெரியுமா?"

"எவ்வளவு சிரமப்படணும். சொல்லுங்களேன்."

"பல நாள் பச்சைத் தண்ணி கூட சாப்பிடாம உபவாசம் இருக்கணும். குறிப்பா காமத்தை அடக்கணும். அடக்கறதோட அதை அழிக்கணும். சுருக்கமா சொல்றேன் எட்டிக்காயை கொஞ்சம் கொஞ்சமா சாப்பிட்டு உன் விந்தை கல்லாக்கிக்கணும். எவ்வளவு பெரிய பேரழகியைப் பார்த்தாலும் துளிகூட சலனப்படக்கூடாது. உச்சபட்சமா ஒரு விஷயம் சொல்றேன். முடியுமான்னு யோசி..."

"என்ன குரு... சொல்லுங்க."

"பெண்தான் இந்த உலகத்தோட மகத்தான சக்தி. அவளைப் புணரும்போது உன் விந்து அவளுக்குப் போகக் கூடாது. ஆனா அவ விந்து உனக்குள்ள வரணும். அப்படிப் புணர உன்னால முடியுமா?"

"எப்படி... எப்படி?"

"ஸ்கலிதம் விடாம, விட வேண்டிய வழியால பெண் ஸ்கலிதத்தை உறிஞ்சணும். முடியுமா?"

"இந்த உலகத்துல இது யாராலையும் முடியாது."

"உன்னால முடியாதுன்னு சொல். யாராலையும்னு சொல்லாதே. ஒரு மகா பெரிய சக்தி உபாசகன் இதை சாதாரணமா செய்வான். செய்தாதான் அவன் சக்தியை அடைவான்."

"இதை நான் நம்பணுமா?"

"அப்ப என் பேச்சை சந்தேகிக்கிறியா நீ...?"

"ஆமாம்... என்னை நீங்க ஆழம் பாக்கறீங்க. ஆமாம் சாமியா தலையாட்றேனா, இல்லை எதிர்த்து கேள்வி கேட்கறனான்னு பாக்கறீங்க..."



"முட்டாள்... சித்திகளை அடையறது அவ்வளவு சுலபமில்லைன்னு சொல்லத்தான் இவைகளை எல்லாம் சொல்றேன்."

"அது எப்படி குரு... முதல்ல காமமே கூடாதுன்னு சொன்னீங்க. காமம் இல்லாம எப்படி புணர முடியும்? அப்படி புணரும்போது எப்படி விந்தை அடக்க முடியும்? அடக்கறோம்னே வையுங்க... இதுக்கு நடுவுல பெண் விந்தை எப்படி உறிஞ்ச முடியும்?"

"நீ சைன்ஸ் பேசறியா?"

"அப்படிக் கூட வெச்சுக்குங்க... என் கேள்வியில என்ன தப்பு?"

"எல்லாமே தப்பு. உன் சைன்ஸ் என் சித்திகள் முன்னால ரொம்ப சின்ன ஒரு சாதாரண விஷயம். எல்லாத்துக்கும் சைன்ஸ்ல விடை கிடையாது வாக."

"இருக்கலாம்... உங்க சாகஸங்களை நானும் எடை போட்டு போட்டுப் பாக்கறேன். எப்படின்னே புரிய மாட்டேங்குது."

"புரியாது... புரிஞ்சுட்டா நீ பேச மாட்டே..."

"என்ன செய்வேன்?"

"அமைதியாயிடுவே. எல்லாத்தையும் வேடிக்கை பார்ப்பே..."

"ஏன் வேடிக்கை பார்க்கணும். இதை கண்கட்டுன்னு சொல்றவங்க வாயை அடைக்கலாம் இல்லையா?"

"எதுக்காக அடைக்கணும்?"

"அப்பதானே அவங்க நம்புவாங்க?"

"ஏன் அவங்க நம்பணும்னு எதிர்பார்க்கறே?"

"நம்பலேன்னா கேலி பேசுவாங்களே... பொய்னு சொல்லி ஒதுக்கித் தள்ளுவாங்களே?"

"அதனால உனக்கு என்ன நஷ்டம்...?"

"மனவேதனை ஒரு நஷ்டம்தானே?"

"அப்படியே... இப்ப நாம எதுல பயணம் செய்துகிட்டிருக்கோம்.?"

"ரயில்ல..."

"இது ரயில் இல்ல பஸ்கன்னு நான் சொன்னா நீ வேதனைப்படுவியா?"

"இதுகூட தெரியாம உளர்றீங்களேன்னு நினைப்பேன்."

"அப்புறம்?"

"இது ரயில்! பஸ் கிடையாதுன்னு சொல்வேன்."

"நான் நம்ப மறுத்து பஸ்தான்னு திரும்ப சொன்னா என்ன செய்வே?"

"உங்களை முட்டாள்னு நினைக்கறத தவிர எனக்கு வேற வழியே கிடையாது."

"அப்படிப்பட்ட முட்டாளை நினைச்சு வருத்தப்பட்றது வீண்தானே?"

"நிச்சயமா..."

"அப்படித்தான் சித்து புரியாம இதை கண்கட்டுன்னு சொல்றவங்களை நினைச்சு வருத்தப்பட்றதும்..."

"அப்ப சொஸைட்டியை ஒதுக்கித் தள்றதுதான் ஒரே வழியா..."

"சொஸைட்டில இதை கண்கட்டுன்னு சொல்றவங்களைத்தான் ஒதுக்கச் சொன்னேன்..."

"அவங்கதானே அதிகம் இருக்காங்க..."

"அசாதாரண விஷயம் தெரிஞ்சவங்க குறைவாகவும், சாதாரணமா புரிஞ்சுக்க முடிஞ்சதை தெரிஞ்சவங்க அதிகமாகவும் உள்ளதுதான் சொஸைட்டி. ஒரு ஊர்ல வைத்தியர்கள் சிலர்தான் இருப்பாங்க. ஆனா நோயாளிகள் பலர் இருப்பாங்க. இது அந்த மாதிரி..."

"அப்ப எல்லோரும் புரிஞ்சு மதிக்க மாட்டாங்களா?"

"எல்லோராலையும் புரிஞ்சுக்க முடியாது வாசு."



"ஏன் அப்படி...? எவ்வளவோ புத்தகங்கள்! செயல் முறைகள், விளக்கங்கள் இவைகளைப் படிச்சு புரிஞ்சுக்க முடியாதா?"

"முடியாது... குருவருள் இல்லாம குருவோட துணை இல்லாம எதையுமே புரிஞ்சுக்க முடியாது."

"இப்படிச் சொல்றது குருவோட சுயநலமாகக் கூட இருக்கலாம் இல்லையா?"

"குருங்கறவர் சுயநலம் இல்லாதவர். சுயநலம் இருந்தா அவர் குரு கிடையாது."

"பல சுயநலம் உள்ள குருக்களை நான் காட்டவா?"

"அவங்க குருக்கள் கிடையாது. அரைகுறைகள்!"

"சரி... புத்தகத்தை குருவா நினைச்சு செயல்பட்டா அது தப்பா?"

"பெரிய தப்பு... புத்தகம் வழிமுறைகளைச் சொல்லும். அதை புரிஞ்சுக்கற சக்தியை அதால தர முடியாது. அதை குருவோட பார்வைதான் தரும். இதுக்கு பேர்தான் நேத்ர தீட்சை! அதாவது கண் வழியா புரிஞ்சுக்கற சக்தியைத் தருவாரு..."

"அப்ப ஏகலைவன் எப்படி வித்தை கத்துகிட்டான்."

"இப்ப எதுக்கு இந்த கேள்வி?"

"குரு இல்லாமலும் வித்தை கத்துக்க முடியும்னு சொல்லத்தான் அப்படிக் கேட்டேன்."

"குரு அவன் வரைல அவன் மனசுல பரிபூரணமா நிரம்பியிருந்தார். அந்த நினைப்பால அவன் சக்தியை அடைஞ்சான். வித்தை கத்துக்கிட்டான். அதுதான் உண்மை."

"அப்படின்னா உங்க தயவில்லாம என்னால இந்த அஷ்டமா சித்திகளை அடைய முடியாதா?"

"நிச்சயமா முடியாது."

"இந்த புத்தகங்களை, எடுகளைத் தாங்க. படிச்சு இதன் படி நடந்து நான் சித்திகளை அடைஞ்சு காட்றேன்."

"ஓ... இதுக்குத்தான் இவ்வளவு கேள்வியா?"

"நீங்க சொன்னதுக்கு என்னோட பதில். எனக்கு என் மேல நம்பிக்கை இருக்கு."

"வாழ்க உன் நம்பிக்கை. உதைபடாத நீ எதையும் புரிஞ்சுக்க மாட்டே. கொஞ்ச நேரத்துல தஞ்சாவூர் ஸ்டேஷன் வந்துடும். இறங்கி உன் ஊருக்கு போய்ச்சேர். நீ எனக்கு ஒத்து வர மாட்டே."

"நீங்க எப்படிச் சொன்னாலும் சரி. ஆனா உங்க கருத்தைப் பொய்யின்னு நான் ஆக்குவேன். நான் சித்திகளை அடைஞ்சும் காட்டுவேன்."

"தனியா முயற்சி செய்தா?"

"ஆமாம்... இனி நான் சொல்லித் தரேன்னு சொன்னாலும் இதுதான் என் பதில்."

பிரம்மசித்தர் அவன் வைராக்கியத்தைப் பார்த்து ஒரு சிரிப்பு சிரித்தார். எங்கோ ஆரம்பித்து எங்கோ முடிந்து விட்டது அவர்கள் பேச்சு.

அவனும்கூட அவரைப் பார்க்காமல் வெளியில் பார்த்தான்.

இவன் வித்தியாசமானவன்.

மிக வித்தியாசமானவன்.

இவனை பாராட்டுவதா... இல்லை இவனுக்காக வருத்தப்படுவதா?

மீண்டும் சிரிப்பு வந்தது. கூடவே வருத்தமும் தோன்றியது. ஒருவன் இப்படி எல்லாம் பேசுகிறான் என்றால் இவன் பின்புறம் மோசமான கர்ம பலன் உடையதாக இருக்க வேண்டும்.

அதுதான் இவனை இப்படி எல்லாம் பேச வைக்கிறது. இனி என்னென்ன நடக்கப் போகிறதோ? கேள்வியோடு



கண்களை மூடினார். பேசிய களைப்பு, இரவின் குளுமையில் உறக்கமாய் அவர் கண்களை ஆக்ரமிக்க, அப்படியே உறங்கியும் போனார்.

கண்களைத் திறந்து பார்த்தபோது, அந்த ரயில் வண்டி அவர் இறங்க வேண்டிய மாயவரம் ஸ்டேஷனில் நின்று கொண்டிருந்தது. ஆனால் அவரது புத்தகங்களும், ஏட்டுச் சுவடிகளும் ரசமணி மற்றும் சில மூலிகைகள் அடங்கிய அந்த பையையும் வாசுதேவனையும்தான் காணவில்லை!

ஒரு கணம் திகைப்பாக இருந்தாலும் மறுகணம் கண்களை மூடி அவன் எங்கே போயிருப்பான் என்று தன் சித்தி மூலம் மனக்கண்ணில் விடை தேடிப் பார்த்தார். தஞ்சாவூரில் பிரகதீஸ்வரர் ஆலயத்துக்கு வெளியே அவரது புத்தகப் பையை தலைக்கு அண்டக் கொடுத்த நிலையில் அவன் படுத்துத் தூங்கிக் கொண்டிருப்பதாக ஒரு காட்சி மனதில் தோன்றி மறைந்தும் போனது.

அடுத்த கணமே இதே போல பேசி தன் குருநாதரான சந்திரப் பிரகாசரிடம் இருந்து எல்லா குறிப்புகளையும் அபகரித்துக் கொண்டு தான் வெளியேறியதும், இதே போல உனக்கும் நிகழும் என்று பின் ஒருநாள் அவர் சொன்னதும்தான் ஞாபகத்தில் வந்தது.

ஒரு தவறு இன்னொரு தவறுக்கு வழியைக் காட்டி விட்டது. அது மேலும் மேலும் தவறுகளைத்தான் செய்யுமா?

## 3

**வி**டிந்து விட்டது!

யாரோ ஒருவர் வந்து "ஏய் எழுந்திரு... " என்று அவனை உசுப்பி விட்டார். அவனும் எழுந்திருந்தான். ஞாபகமாக பிரம்ம சித்தரின் ஜோல்னாப் பையை தோளில் ஏற்றிக் கொண்டான். ஒரு மாதிரி கொட்டாவியும்

விட்டான். தலை எல்லாம் கலைந்து ஒரு மாதிரி இருந்தான். நாலு முழ வேட்டி- ஒரு அரைக்கை சட்டை அதிலும் நான்கு நாள் அழுக்கு. சட்டைப் பாக்கெட்டிலோ காலணா இல்லை. விடியல் அவனைப் பயமுறுத்த ஆரம்பித்தது. எங்கு போவது என்ன செய்வது என்றே தெரியவில்லை. ஒரு காபி குடிப்பதாக இருந்தால் கூட குறைந்த பட்சம் ஐந்து ரூபாய் வேண்டும். சவடாலாக பிரம்மசித்தரிடம் பேசிவிட்டு கம்பி நீட்டியாகி விட்டது. இனி? கேள்வியோடு நடக்கத் தொடங்கினான். ஊர் புதுசு எங்கு போவது என்றே தெரியவில்லை. சட்டென்று புத்தியில் ஒரு மின்னல். தஞ்சாவூரில் தனக்கு ஒரு மாமா இருப்பது ஞாபகத்தில் வந்தது. ஆனால் அவரோடு அவ்வளவாக தொடர்பு கிடையாது. அதனால் அட்ரசும் தெளிவாக தெரியாது. இருந்தும் அவர் சத்யசாய் நகர் என்கிற ஒரு ஏரியாவில் இருப்பது மட்டும் லேசாக நினைவலைகளில் அகப்பட்டது. அவர் பெயரும் கூட சற்று வித்தியாசமானது. அப்பண்ணா மாமா என்பார்கள். மாமாவும் பேங்க் உத்யோகம் பார்ப்பவர். ஆகையால் நிச்சயம் போன் வைத்திருப்பார். அப்பண்ணா என்கிற பெயரில் டெலிபோன் டைரக்டரியை பார்த்தால் முகவரி மாட்டும் என்று தோன்றியது.

டைரக்டரிக்கு எங்கே போவது?

கண்களில் துளாவலோடு தஞ்சாவூரில் பெரிய 'கோவி லுக்கு எதிரான சாலையில் நடக்கத் தொடங்கினான். நல்லவேளையாக ஒரு தொலைபேசி பூத் கண்ணில் பட்டது. அப்பொழுதுதான் கடை திறந்து கொண்டிருந் தார் பூத்காரர். போய் எதிரில் நிற்கவும் அவர் ஏற இறங்கப் பார்த்தார்.

"ஒரு போன் பண்ணணும்."

"தாராளமா... முதல் போணி. சில்லறை இருக்கா?" அவர் கேள்வியே அவனை நெருடியது. காசில்லாத நிலையில் ஏதோ தைரியத்தில் தலையை அசைத்தான்.



"பண்ணிக்குங்க."

"டெலிபோன் டைரக்டரி வேணும்."

"நம்பர் தெரியாதா?"

"ஆமாம். அப்பண்ணான்னு என் மாமா வீட்டுக்கு போன் பண்ணணும்."

அவர் அரை மனசாக ஒரு ஷெல்ஃபிலிருந்து ஓரங்கள் நைந்த டெலிபோன் டைரக்டரி ஒன்றைத் தூக்கிப் போட்டார். வாசுதேவனும் பேரையும் சத்யசாய் நகரையும் மனதில் வைத்துக் கொண்டு எண்ணைத் தேடத் தொடங்கினான்.

அதிக சிரமமில்லாமல் நம்பர் பதினேழு முதல் தெரு என்கிற முகவரியோடு மாமா பெயர் அகப்பட்டுவிட்டது. முகவரி தெரிந்த நிலையில் டைரக்டரியை திரும்ப அவரிடம் நீட்டி விட்டு "சாரி... அந்த பேர்ல நம்பரே இல்லை" என்று ஒரு பொய்யை சலனமே இல்லாமல் சொன்னான். அவரும் ஒரு மாதிரி முறைத்துப் பார்த்தார்.

"சாரி... வெரி சாரி..."

"ஹூம் இன்னிக்கு நான் போணி பண்ண மாதிரிதான்" அவரிடம் சன்னமான புலம்பல். அதைக் காதில் வாங்காமல் மீண்டும் வீதியில் இறங்கினான். ஆட்டோ ஒன்று பறந்து வந்தபடி இருந்தது. கைதட்டி அழைத்து அதில் ஏறி அமர்ந்தான்.

"நம்பர் பதினேழு, முதல் தெரு சத்யசாய் நகர்" என்றான் ஆட்டோக்காரரிடம். அவரும் பதினைந்தாவது நிமிடம் வீட்டு வாசலில் இறக்கி விட்டார்.

"ஒரு நிமிஷம்..." என்று வீட்டினுள் நுழைந்தான். மாமா ஹிந்துவை மேய்ந்தபடி இருந்தார். நிமிர்ந்து வாசு வைப் பார்த்துவிட்டு அதிக பட்சம் ஆச்சரியப்பட்டார்.

"ஏலேய் நீ வாசுதேவன் தானே?"

"வாசுவேதான் மாமா. சௌக்யமா மாமா..."

"நான் சௌக்யம். நீ எங்க இவ்வளவு தூரம்?"

"எல்லாத்தையும் விபரமா சொல்றேன் மாமா. அதுக்கு முந்தி ஒரு ஐம்பது ரூபாயை எடுங்க"

"என்னடா இது வந்ததும் வராததுமா பணம் கேக்கறே?"

"ஆட்டோக்காரனுக்கு கொடுக்கத்தான்... வர்ற வழியில ரயில்ல எவனோ என் பர்ஸை பிக்பாக்கெட் பண்ணிட்டான். நல்லவேளை எப்படியோ வந்து சேர்ந்தேன்."

அவனது பொய் வேலை செய்தது. மாமா 'அடடா...' என்றபடி எழுந்து போய் பணத்தை எடுத்து வந்து ஆட்டோக்காரனை அனுப்பிவிட்டு வந்தார். அதற்குள் மாமி திரிபுரசுந்தரி, மாமியின் மகள் ஷ்யாமளா, மகன் முரளி என்று எல்லோரும் அவனைச் சுற்றிக் கொண்டு நலம் விசாரித்து முடித்தார்கள்.

"அப்புறம்... எப்படி இருக்கே?"

"இருக்கேன் மாமா. உங்க ஊர் மாரியம்மனை தரிசனம் பண்ணலாம்னு வந்தேன்." என்று அடுத்து ஒரு பொய்க்கு பாதை போட்டான். அதன் பின் காபி சாப்பிட்டு குளித்து முடித்து மாமன் மகன் முரளியின் வேட்டி சட்டையை வாங்கி அணிந்து கொண்டான். ஒரு சூட்கேஸில் பர்ஸை வைத்திருந்ததாகவும் சூட்கேஸோடு திருடு கொடுத்து விட்டதாகவும் சொன்னான். எனவே அடுத்து துணி மாற்றக் கூட சிக்கலாகி விட்டது என்று அதற்கும் ஒரு பொய்யைச் சொல்லி முடித்தான்.

இதற்குள்ளாகவே அவன் பையை பார்த்த மாமா அப்பண்ணா அதிக பட்ச ஆச்சரியத்தின் உச்சிக்கே போய் விட்டிருந்தார்.

"ஆமா என்ன இது உன் பைல... ஏதோ சன்யாசியோட பை மாதிரி. ஒரே ஸ்லோக புத்தகம். சக்தி ரகசியம், குண்டலினியோகம், அஷ்டமாசித்து மார்க்கம்னு ஏதேதோ புத்தகங்கள்?"



"அதுவா மாமா... நான் இப்ப அஷ்டமாசித்திக்காக பயிற்சி எடுத்துண்டிருக்கேன்." என்று ஒரு பதில் குண்டை போட்டு மாமாவை அதிரவிட்டான்.

"என்னது அஷ்டமாசித்திக்காக பயிற்சி எடுத்துண்டிருக்கியா?"

"ஆமாம் மாமா... நம்ப முடியலையா?"

"எப்படிடா நம்பறது? பெரிய பெரிய ஞானிகளே அந்த சித்திக்காக வாழ்நாள் பூரா கஷ்டப்பட்டுட்டு ஒண்ணும் கிடைக்காம செத்தும் போய் சேர்ந்துட்டா. நீ என்னடான்னா ஏதோ கம்ப்யூட்டர் கத்துக்கற மாதிரி பயிற்சி எடுக்கறேன்னு சாதாரணமா சொல்றே?"

"நீங்க எப்படி நினைச்சாலும் சரி மாமா. நான் இந்த சித்திகளை அடையாம விடமாட்டேன். அதை நீங்க போகப் போக பார்ப்பேள்."

அவனது நம்பிக்கையான பேச்சைத் தொடர்ந்து அவர் அவனை டிபன் சாப்பிட அனுப்பிவிட்டு முதல் காரியமாக சேலத்தில் இருக்கும் அவன் அப்பா விஸ்வநாதனுக்குத்தான் போன் செய்தார்.

"மாப்பிள்ளை சௌக்கியமா?"

"ஏதோ இருக்கேன். என்ன இது திடீர்னு என் ஞாபகம்?"

"காரணமாத்தான். உங்க பிள்ளையாண்டான் இங்கே வந்துருக்கான். பாக்கவே வித்தியாசமா இருக்கான். பேச்சு செயல் எல்லாமே ஒரு மாதிரியா இருக்கு. அதான் உங்களுக்கு போன் பண்ணினேன்."

"என்னது... வாசு அங்க உங்காத்துக்கு வந்துருக்கானா?"

"அட ஆமாம் மாப்பிள்ளை..."

"என் வயித்துல பாலை வார்த்தே அப்பண்ணா. அவனைத்தான் காணாம தேடிண்டிருக்கேன். அந்த நாய் அங்க வந்துருக்கானா?"

"அப்ப தெரியாம வந்துருக்கானா?"

"ஆமாம் அப்பண்ணா. அவனோட பெரிய ரோதனை. வெளிய சொன்னா வெக்கக்கேடுன்னு வாயை மூடிண்டு இருக்கேன். அவனை அப்படியே அமுக்கி வையுங்கோ, நான் உடனே கிளம்பி வரேன். கொஞ்சம் அசந்தாலும் அங்க இருந்தும் கம்பி நீட்டிடுவான்.

"என்ன மாப்பிள்ளை நீங்கோ... ஏதோ ஒரு பாத்தாத் திருடனைப் பத்தி சொல்ற மாதிரி சொல்றேளே. அவன் என்னடான்னா அஷ்டமா சித்தி அது இதுன்னு உளறிண்டிருக்கான்?"

"சொல்றேன்... சொல்றேன்... எல்லாத்தையும் நேர்ல வந்து சொல்றேன். அவனை மட்டும் வெளிய விட்டுடாதேள்."

விஸ்வநாதன் பெரிதாக சங்கு ஊதி முடிக்க அப்பண்ணாவும் விதிர்த்துப் போய் டைனிங்ஹால் பக்கமாய் வாசலைத் தேடிக்கொண்டு வர, டேபிள் மட்டும் இருந்தது. ஆளைக் காணவில்லை. கிச்சனில் திரிபு காரியமாக இருந்தாள். மாமா எட்டிப் பார்த்து "எங்கடி வாசு?" என்று கேட்க, "இங்கதான் இருந்தான்..." என்று அவளும் வெளியில் வந்தாள்.

"அவன் நிலையே சரியில்லையாம். ஏதோ திருடனைப் பிடிச்சு வைங்கற மாதிரி அவன் அப்பா இப்பதான் போன்ல சொல்லி முடிச்சார். இங்க என்னடான்னா ஆளைக் காணோம். அப்பண்ணா அலாபித்தார்.

"என்னண்ணா சொல்றேள். அவன்கிட்ட அப்படி என்ன கோளாறு?" என்று திரிபு திருப்பிக் கேட்க.

"எல்லாத்தையும் மாப்பிள்ளை வந்து சொல்றேன்னு சொல்லியிருக்கார்." என்றபடியே அப்பண்ணா அவனை மற்ற இடங்களில் தேடத் தொடங்கினார்.

எங்கும் இல்லை.

கூடவே பல அதிர்வுகள் காத்திருந்தன.



அந்த வீட்டின் பீரோ திறந்து கிடந்தது. உள்ளே நகைநட்டு வெள்ளிப் பாத்திரத்தில் இருந்து கையிருப்பாய் வைத்திருந்த சில ஆயிரங்கள் வரை சப்ஜாடாக எல்லாமே அபேஸ். "அடப்பாவி... நீ இவ்வளவு மோசமானவனா?" அப்பண்ணாவை கேள்வியோடு மயக்கம் வந்து அள்ளி விழுங்கியது!

## 4

2001!

ஜனவரி 1ம்தேதி.

சேலம் சுகவனேஸ்வரர் கோயிலில் எள் போட இடமில்லை. அப்படி ஒரு கூட்டம்.

கம்ப்யூட்டர் யுகத்தில் பக்தி ஆனாலும் அதிகரித்துத் தான் விட்டது. கூட்டத்தில் விஸ்வநாதனும் இருந்தார். கூடவே அவரது மனைவி மங்களாவும் வந்திருந்தாள்.

சமர்த்தாக வரிசையில் நின்றபடி நகர்ந்து கொண்டிருந்தனர். இருவர் முகத்திலும் ஏனோ ஒளியே இல்லை. ஒருவரோடு ஒருவர் எந்த பேச்சும் இல்லாதபடி நகர்ந்தபடி இருந்தனர். நடுநடுவே சில பிச்சைக்காரர்கள் மட்டும் குறுக்கில் கைகளை நீட்டினார்கள். யாரும் பெரிதாக சட்டை செய்யவில்லை. சிலர் புண்ணிய வேட்டை என்று சுருதி காசு போட்டார்கள். அந்தப் பிச்சைக்காரர்களுக்கு நடுவில் ஒரு பிராம்மணரும் இருந்தார். நல்ல ஒளி மிகுந்த முகம். விபூதியும் பட்டையும் நெற்றியில் ஜொலிப்பாய் ஜொலித்தது. இடுப்பில் பஞ்சகச்சம்.

அவர் பிச்சை கேட்டதுதான் ஆச்சரியம்.

விஸ்வநாதனிடம் அவர் கைகளை நீட்டவும் அவருக்கு என்னவோ போலாகி விட்டது.

"சுவாமிகள் பிராம்மணரா?" கேட்டார்.

"ஆமாம்... அடியேன் வேதப் பிராம்மணன்."

"இப்படி பிச்சை எடுக்கறேளே..."

"இது வேண்டுதல். பல காரணங்களுக்காக நேர்ந்துண்டு பிச்சை எடுக்கறேன்."

"பிச்சை எடுக்கறது வேண்டுதலா?"

"பொணமா பாடைல படுத்துண்டு யாத்திரை போறேன்னும் வேண்டிக்கறதுண்டு. கேள்விப்பட்டதில்லையா?"

"இல்லை... எனக்கு இது எல்லாமே புதுசு..." விஸ்வநாதன் தன் கருத்தைச் சொல்ல மங்களம் இடைவெட்டினாள்.

"இப்படி பாலிஷா எதையாவது சொல்லிண்டு பிச்சை எடுக்கறது இப்ப ஃபாஷனா போச்சு..."

அவரை அது என்னவோ பண்ணியது.

"அம்மாடி... சத்யமா நான் வயித்துக்கில்லாம பிச்சை எடுக்கலை. இது வேண்டுதல்தான்." என்றார் மிக வேகமாக.

"போறும்... எங்களுக்கு காது குத்தியிருக்கு. போய் வேலையைப் பாருங்கோ... இது என்ன ஈனப் பொழப்பு. இதுக்கு பிராம்மணார்த்தம் சாப்ட போகலாம். சகுண்டி பிராம்மணனா கூட இருக்கலாம்."

மங்களம் முகத்தில் அறைந்த மாதிரி சொன்னாள். கூட்டம் சன்னதி நோக்கி நகர்ந்து கொண்டு இருந்தது. நகர்ந்தபடியேதான் அவளும் பேசினாள். ஆனால் அவள் அப்படி பேசியது விஸ்வநாதனுக்கு பிடிக்கவில்லை என்பது அவர் முகம் போன போக்கில் தெரிந்தது. அந்த பிராம்மணரும் அதைப் பார்த்தார். என்ன நினைத்தாரோ சட்டென்று கண்கள் இடுங்க, "அம்மாடி... நான் வேதம் படிச்ச வித்தை தெரிஞ்ச ஒரு பிராம்மணன். என் வித்தையால் நான் மனசு வெச்சா கோடி கோடியா சம்பாதிக்க முடியும். ஆனா அது என் நோக்கம் கிடையாது. பிராம்ம



ணன் எப்பவும் தனக்காக வாழக் கூடாது. ஊருக்காக வாழணும். அப்படி ஊருக்காக வாழற ஒரு பிராம்மணன் நான்கறது உண்மைன்னா நான் அல்ப பிச்சைக்காரன் இல்லேங்கறது உனக்கு தெரியறதுக்காக ஒரு விஷயம் சொல்றேன். அப்ப நீ என்னை புரிஞ்சுப்பே..."இப்ப மணி என்ன?" அவர் மிக வேகமாய் கேட்டார். அவள் பதில் சொல்லாமல் வேறு பக்கமாய் திரும்பிக் கொண்டாள். ஆனால் விஸ்வநாதன் வேகமாய் கை கடிகாரத்தைப் பார்த்து விட்டு மணியைச் சொன்னார்.

"ஸ்வாமி... இப்ப மணி பத்தரை ஆகறது."

"நல்லது... இன்னிக்கு மதியம் மூணு மணியில இருந்து அஞ்சு மணி வரை மழை கொட்டப் போறது. அதால சாக்கடையா ஓடிண்டிருக்கற திருமணி முத்தாற்றுலையும் முழங்கால் அளவுக்கு தண்ணி ஓடும். இதை நீங்க பார்ப்பேள். அப்புறமா நான் யார்ங்கறது தெரியும் உங்களுக்கு... இப்ப நான் வரேன்!" அவர் விலகி வேறுபக்கம் செல்லத் தொடங்கினார். நெடுநேரம் விஸ்வநாதன் அவரையே பார்த்தபடி வரிசையில் நடந்தார். மங்களத்திடம் அவரைப் போல எந்த அருசையும் இல்லை. விஸ்வநாதனுக்கு மட்டும் அருசை கரை புரண்டது.

"எதுக்கு மங்களம் இப்படி எடுத்தெறிஞ்சு பேசினே?" என்று மெல்லிதாய் அவளிடம் வருத்தப்பட்டுக் கொண்டார்.

"பேசாம வாங்கோ... கதாரிப்பா இருக்கறதுக்கு பேர் எடுத்தெறியறது கிடையாது. இது எச்சரிக்கை. அதான் பெரிய மகானாட்டம் மூணுமணிக்கு மழை பெய்யும்னுட்டு போய்ட்டாரே. மார்கழி மாசத்துல மழை பெய்யாது. பனிதான் பெய்யும். மூணுமணி ஆகட்டும். அப்ப தெரியும் நான் பேசினது சரின்னு." என்று மீண்டும் அலட்சியமாக பதிலைச் சொன்னாள். அதன் பின் விஸ்வநாதன் அவளிடம் எதுவும் பேசவில்லை. சுவாமி தரிசனம் முடிந்து காரில் ஏறி கிளம்பியும் போய் விட்டார்கள்.

அப்படிப் போகும்போது வெய்யில்தான் காய்ந்தபடி இருந்தது. வானத்திலும் அப்படி இப்படி கூட மேகத் துணுக்குகளை பார்க்க முடியவில்லை. விஸ்வநாதனுக்கே கூட மழை பெய்யுமா என்கிற சந்தேகம்.

மணி மூன்று!

ஒரு ஆச்சரியம் போல சுஷணத்தில் இருட்டு கட்டி சேர்வராயன் மலைப் பக்கமாய் இருந்து மேகங்கள் திமுதிமுவென்று வர ஆரம்பித்தன.

சட்ட பந்தகமும் கையுமாய் ஒரு கேஸ் ஃபைல் பார்த்தபடி இருந்த விஸ்வநாதனுக்கு பொழுது இருளத் தொடங்கி மேகம் மகாநாடு போல கூடத் தொடங்கி விட்டதை உணரவில்லை. திடீரென்று வீசிய சில்லென்ற காற்றும், சடசடவென்று உதிர ஆரம்பித்த மழை நீர் பொட்டுக்களும்தான் அவரது கவனத்தைப் பிடித்து திசை திருப்பின.

மதியம் ஓய்விலிருந்த மங்களம் கூட சப்தம்கேட்டு எழுந்து விட்டாள். ஜன்னலைத் திறந்து வெளியே பார்த்தாள். வானம் கறுத்து மழை விளாச ஆரம்பித்திருந்தது.

அந்த பிராம்மணர் சொன்னது சத்யம் என்கிற மாதிரி மழையிடம் அசுர வேகம். பின்னாலேயே வந்து நின்றார் விஸ்வநாதன். மங்களம் அவரை சற்று பயத்துடன் பார்த்தாள்.

"இப்ப என்னைப் பார்த்து பிரயோஜனமில்லை. அந்த பிராம்மணர் சொன்னது சத்யம்னு ஆயிடுத்து பார்த்தியா?"

"ஆமாம்னா..."

"ஒரு அசாதாரண மனுஷரை கருவேப்பில கொத்து மாதிரி நினைச்சு தூக்கிப் போட்டுட்டே. எவ்வளவு சத்யமானவரா இருந்தா இப்படி இயற்கையா நடக்கப் போறத கூட கணிக்க முடியும்னு யோசிச்சுப் பார்."



"உண்மைதான். நான் தப்பு பண்ணிட்டேன். இப்ப என்னன்னா பண்றது?"

"என்ன பண்றதுன்னா... என்னடி கேள்வி? உன்னோட இந்த புத்திதான் நம்ம பிள்ளை கூட நம்மை விட்டுப் போக காரணம். வருஷம் இருபது ஆயாச்சு. இன்னிக் கெல்லாம் இருந்தா நாப்பது வயசு. கல்யாணம் ஆகி பத்து பதினைஞ்சு வயசல குழந்தைகளும் இருக்கும். எங்க இருக்கானோ... எப்படி இருக்கானோ?"

விஸ்வநாதன் அங்கு தொட்டு இங்கு தொட்டு தொலைந்து போன அவர் மகன் வாசுதேவன் நினைப்பில் விழுந்தார். அவர் வாசுவைப் பற்றி நினைத்ததன் எதிரொலி மங்களம் முகத்தில் வேறுவிதமாய் எதிரொலித்தது.

"என்னா... இவ்வளவு தூரம் மழை காத்தை கூட கணிச்சுச் சொன்ன அந்த பிராம்மணர் நம்ம பிள்ளை எங்க இருக்கான்னு கேட்டா சொல்ல மாட்டாரா... அவர்கிட்ட கேட்டா என்ன?"

மங்களம் அழகாய் எடுத்துக்கொடுத்த மாதிரிதான் இருந்தது.

"எந்த மூஞ்சியை வெச்சுண்டு அவர்கிட்ட போய் நீ இதை கேப்பே?" திருப்பிக் கேட்டார் விஸ்வநாதன்.

"என்னன்னா கேள்வி இது. நான் ஒரு சராசரி மனுஷின்னா... லோகமும் தப்பா இருக்கு. தப்பா இருக்கற வாளையே பாத்துப் பாத்து நானும் சந்தேகப்பட்டு தப்பா பேசிட்டேன். அவர் நிஜமாலுமே வேதம் படிச்ச பிராம் மணர்னா என் அலட்சியத்தை பெரிசா எடுத்துக்க மாட்டார். மன்னிச்சுக்கோங்கோன்னா மன்னிக்க மாட்டாரா என்ன?"

மங்களம் வெகு அழகாய் மடக்கினாள். விஸ்வநாதனும் யோசிக்க ஆரம்பித்தார். வெளியேயும் மழை துவம்சம் பண்ணிக் கொண்டிருந்தது.

"சரி மங்களம். நீ சொன்னபடியே அவர்கிட்ட போய் பேசிப் பாக்கறேன். என்ன சொல்றார்னு பார்ப்போம்."

"பாக்கறேன் இல்ல... பாக்கறோம்."

"பிள்ளைன்னா உடனே நீ எதுக்கும் தயாராயிடறே?"

"அவன் கிடைச்சுட்டா போதுண்ணா... அத விடவா ஒரு பெரிய விஷயம் என் வாழ்க்கைல இருக்க முடியும்?"

"நம்ம வாழ்க்கைன்னு சொல்லுடி. கோர்ட்ல பல வழக்குல இருக்கறதை இல்லேன்னு சொன்ன பாவத் துக்கு, நமக்குன்னு இருந்த ஒரே பிள்ளையும், இருந்தும் இல்லாம போயிட்டான். ஏதோ அந்த வேத பிராம்மணர் வடிவத்துல காலம் கருணை செய்தா சரி. என் மங்களம்... நம்ம பிள்ளையாண்டான் கிடைச்சிடுவானா?"

"நம்புவோம்... இல்லேன்னா நான் கோயிலுக்கு போன இடத்துல அந்த பிராம்மணராண்ட முறைப்பேனா... அவ ரும் மழைவரும், வெள்ளம் வரும்னு சொல்லி தன்னை நிரூபிக்கப் பார்த்திருப்பாரா... இல்ல இப்படி மழைதான் வந்து ஊரையே பிடிச்சு ஆட்டுமா?"

மங்களம் மனம் நெகிழ நம்பிக்கையோடு பதில் சொன்னாள். ஆமோதிக்கும் ரகமாய் வெளியே வானில் சவுக்கடி போல் ஒரு மின்னல் வெட்டு!

திருமணிமுத்தாற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடிக் கொண்டிருந்தது. ஒருநாள் மழையில் வெள்ளப் பெருக்கு என்றால் அது சாதாரண விஷயமா என்ன? ஊரே கூடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

ஆற்றுப் பாலத்தில் காரைச் செலுத்தும் போது வில்வ நாதனும் மங்களமும் கூட எட்டிப் பார்த்தனர். ஆச்சரியப் பரவசத்தின் ஆக்ரமிப்பில் ஒரு மௌனத் திணறல் அவர்களிடம்!

அதன் பின்பு கார் விரைவாக ஓடி கோவில் வாசலில்தான் போய் நின்றது.

"ஈஸ்வரா அந்த பெரியவர் இருக்கணும். எங்கேயும் போயிருக்கக் கூடாது." என்றபடியே காரை விட்டு



இறங்கி அவரைத் தேடத் தொடங்கி விட்டாள் மங்களம். கோவிலுக்கு வெளியே குளத்தங்கரையை ஒட்டி யானை கட்டி மண்டபம் ஒன்று இருக்கிறது. பெரும்பாலும் கோவிலில் பிச்சை எடுப்பவர்களும், கோவிலுக்கு வரும் பௌராணிகர்களும் அந்த மண்டபத்தை ஒட்டியுள்ள தென்னந்தோப்பில்தான் கண்ணில் படுவார்கள்.

நல்லவேளை... மிக மிக நல்லவேளை!

அந்த பிராம்மணர் கண்ணில் பட்டார். இருவரும் வருவதைப் பார்த்து மந்தகாசமாகச் சிரித்தார். அவரைப் பார்த்து விட்ட நொடி மங்களம் ஓடிச் சென்று பொதேல் என்று காலில் விழுந்தாள்.

"பெரியவா என்னை மன்னிச்சிடுங்கோ... நான் உங்க மகிமை தெரியாம அவசரப்பட்டு பேசிட்டேன்..."

"எழுந்திரும்மா... எனக்கு தெரியும் நீ வருவேன்னு..."

"நாங்க இப்ப உங்களைத்தான் நம்பி வந்துருக் கோம்..."

"எனக்கு எல்லாம் தெரியும்... எல்லாம் உங்க காணாம போயிட்ட பிள்ளையைப் பத்திதானே?"

அந்த பிராம்மணர் அவர்களுக்கு இன்ப அதிர்ச்சி அளித்தார்.

"ஆமாம் ஸ்வாமி... இருபது வருஷமாறது. அவன் எங்க இருக்கான், எப்படி இருக்கான்னே தெரியல. நாங்களும் தேடாத இடம் இல்லை."

"தெரியும்... எனக்கு எல்லாம் தெரியும்."

"தெரியுமா... அவன் எங்க இருக்கான்னும் தெரியுமா?"

"தெரியுமே..." பதிலைச் சொன்ன மட்டோடு ஒரு சிரிப்பு வேறு அந்த பிராம்மணரிடம்.

"எங்க இருக்கான்... எங்க இருக்கான்...?" பாய்ச்சலாக பாய்ந்தாள் மங்களம்.

"இடத்தைச் சொல்லிடுவேன். ஆனா அவன் இருக்கற நிலையைப் பார்த்தா உன்னால தாங்க முடியாது."

"என்ன ஸ்வாமி... என்னென்னவோ சொல்றேளே. அவன் எங்கே இருக்கான்னு முதல்ல சொல்லுங்கோ..."

"முதல்ல ஆசுவாசப்படுத்திக்கோ. தாய்ப்பாசம் பத்தி எனக்கும் தெரியும். உன் வயிறு துடிக்கறதை நானும் பாக்கறேன். ஒரு விஷயம்..."

"என்ன ஸ்வாமி..."

"இருபது வருஷமா பிரிஞ்ச நீங்க இனியும் அப்படியே இருந்துடறதுதான் நல்லது. என்னா அவனை நீங்க பார்த்தா அது நல்லதில்லை."

"என் நல்லதில்ல ஸ்வாமி... என்?"

"காரணமெல்லாம் நான் சொல்ல மாட்டேன். நல்லதில்லைன்னு மட்டும்தான் சொல்வேன். அப்புறம் உங்க சௌகர்யம்." அவர் பதில் விஸ்வநாதனை சற்று மௌனியாக்கியது. ஆனால் மங்களம் அவர் பதிலை கண்டு கொள்ளவேயில்லை. நீங்க அவன் இருக்கற இடத்தை சொல்லுங்கோ. மிச்சத்தை நான் பாத்துக்கறேன். எனக்கு என் பிள்ளையை பார்த்தாகணும்."

"திரும்பவும் சொல்றேன். அவனும் நீங்களும் சேர்றது நல்லதில்ல, தூர இருந்தா அவன் இப்ப இருக்கற மாதிரியே இருந்திடுவான். கிட்ட வந்துட்டா எல்லார் நிலையும் மாறிடும்."

"நீங்க முதல்ல அவன் இருக்கற இடத்தை சொல் லுங்கோ." மங்களம் தேய்ந்த ரிக்கார்டு போல பழைய இடத்துக்கே வந்தாள். அவரும் சொன்னார். அதைக்கேட்ட அவர்கள் முகத்தில் ஈயாடவில்லை!



## 5

மண்டைக்காடு!

புராதனமான பகவதி அம்மன் ஆலயத்துக்கு சில கிலோ மீட்டர் தெற்கில் ஒரு தென்னந்தோப்பு. தோப்பை ஒட்டி ஒரு புழா!

புழாவின் முன் ஒரு மண் பாதை. அந்தப் பாதை மேல் விஸ்வநாதனின் கார் நெடுந்தூரக் களைப்போடு வந்து தேங்கி நின்றது. காரில் இருந்து விஸ்வநாதனும் மங்களமும் போட்டி போட்டுக் கொண்டு இறங்கினார்கள்.

இறங்கின வேகத்தில் புழாவைத்தான் பார்த்தார்கள்.

அதில் சிலர் நத்தைகளைப் பிடித்துக் கொண்டும் மீனுக்கு வலை போட்டுக் கொண்டும் இருந்தனர். புழாவின் கரையில் காலுக்கும் கழுத்துக்குமாய் பிணைக்கப்பட்ட சங்கிலி வளையத்தோடு ஒருவன்!

"என்னா... அந்த பிராம்மணா சொன்ன மாதிரியே அதோ சங்கிலியோட ஒருத்தன்" மங்களம் கை காட்டினாள். விஸ்வநாதன் உடனேயே அவனை நோக்கித்தான் ஓடினார். புழாவின் கரையில் இருந்த அந்த சங்கிலிக் காரனும் ஓடி வரும் விஸ்வநாதனைப் பார்த்து விட்டு சிரித்தான். விஸ்வநாதனும் நேருக்கு நேர் அவனைப் பார்த்துவிட்டு ஒரு க்ஷணம் விக்கித்து பின் உணர்ச்சி வசப்பட்டு "வாசு..." என்றார் தீனமாக. ஆனால் அவனிடம் பெரிதாக பதில் எதிரொலிக்கவில்லை. சிரிப்பு மட்டும் அழியாதபடி தொடர்ந்து கொண்டிருந்தது.

"மங்களா வாசுடி... நம்ம வாசுடி. இது நம்ம வாசுவே தான். வந்து பார்..." திரும்பிப்பார்த்து கூவ அவளும் ஓடி வந்து பார்த்து விட்டு கண்ணீர் சொரிய "வாசு... என்னடா இது கோலம்?" என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொள்ளத் தொடங்கினாள்.

ஆனால் அவனிடமோ சிரிப்பு கலையவேயில்லை. அது அதிகரிக்க வேண்டுமானால் செய்தது.

இருவரின் செய்கையையும் பார்த்துவிட்டு சிலர் நெருங்கி வந்தனர். அதில் ஒருவர் விஸ்வநாதனைப் பார்த்து கேட்டார்.

"இந்த பைத்தியக்காரனை உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியுமாவா... இவன் என் மகன்யா. என் மகன்."

"மகனா... மகனை இப்படியா பைத்தியமா சுத்த விட்டுட்டு எனக்கென்னன்னு இருப்பீங்க?"

"என்னய்யா கேள்வி இது... இவனை நாங்க தேடாத இடம் இல்லை. எங்க ஊர் சேலம். இதுவோ கேரளா பார்டர். இவன் இங்க இருப்பான்னு எங்களுக்கு எப்படித் தெரியும்?" விஸ்வநாதன் துக்கத்தோடு கேள்வி கேட்டார்.

"சரி... இப்ப மட்டும் எப்படித் தெரியுமாக்கும்?"

"ஒரு பெரியவர் சொல்லி இந்தப் பக்கம் வந்தோம். ஆமா இவன் எவ்வளவு நாளா இங்க இருக்கான்னு உங்களுக்குத் தெரியுமா?"

"இவன் இங்கையேதான் இருக்கான். எனக்குத் தெரிஞ்சு பதினைஞ்சு இருபது வருஷமா இருக்கான்..."

"கடவுளே... இது எங்களுக்கு முந்தியே தெரியாம போயிடுச்சே? ஆமா எதுக்குய்யா இப்படி சங்கிலி போட்டு வெச்சிருக்கீங்க?"

"பைத்தியத்தை சங்கிலில போட்டு பூட்டாம வேற என்ன செய்வாங்களாம்?"

"தப்பா எடுத்துக்காம சொல்லுங்கய்யா. எவ்வளவு நாளா இவனுக்கு இப்படி இருக்கு.?"

"அது இருக்கு ஒரு பத்து பதினைஞ்சு வருஷமா..."

"ஐய்யோ... அப்ப என் புள்ளை பதினைஞ்சு வருஷமா இப்படித்தான் கைதி மாதிரி சங்கிலியோட இருக்கானா?"



"ஆமாம்மா... அவுத்துவிட்டா அவ்வளவுதான். ரத்த வெறி பிடிச்ச மிருகம் மாதிரி மனுஷங்க மேல பாய்ஞ்சு கடிச்சுக் குதறிட்றான். அதான் இப்படிச் செய்துருக்காங்க."

அவர்கள் விளக்கம் சொல்லச் சொல்ல மங்களத்துக்கு அடி வயிற்றில் கரியைப் போட்டு நெருப்பை மூட்டுவது போல காந்தியது.

"போதும்... போதும்... இனி எதுவும் எங்களுக்குத் தெரிய வேண்டாம். நாங்க இவனைக் கூட்டிகிட்டு போறோம்..." என்றவள் வாசுவை நெருங்கிக் கட்டிக் கொண்டாள். அழுதாள்.

"வாசு... இனிமே நீ இப்படி சங்கிலியோட சிரமப்பட வேண்டாம்டா... அம்மா நான் இருக்கேன். நான் உன்னைப் பாத்துக்கறேன்டா... கவலைப்படாதே" என்று அவனை இறுக்கிக் கட்டி முத்தமும் இட்டாள்.

"அம்மாம்மா அவசரப்படாதீங்க. நாங்களும் பரிதாபப் பட்டு பல சமயம் சங்கிலி கட்டை அவிழ்த்து விட்றுக் கோம். அப்பல்லாம் இந்த ஊர்ல பயங்கரமா விபரீதங்கள் நடக்க ஆரம்பிச்சிடுது. இவன் பார்க்கத்தான் பைத்தியமா இருக்கான். மத்தபடி இவன் கிட்ட சில விசேஷ சக்தியையும் நாங்க பாக்கறோம்."

"அந்த நபர் சொன்ன செய்தி விஸ்வநாதனையும் மங்களத்தையும் திடுக்கிட வைத்தது.

"விசேஷ சக்தின்னா...?" கேட்டார்.

"அதை எப்படி சொல்வோம். பௌர்ணமி சமயத்துல இவன் பாட்டு வந்து இந்த புழாவுல சங்கிலியோட இறங்கி மிதக்க ஆரம்பிச்சுட்றான்..."

"மிதக்கறானா?"

"ஆமாம். ஒரு தக்கை மிதக்கற மாதிரி மிதக்கறான்னா அது சாதாரண விஷயமா? அதே மாதிரி பல நேரங்கள்ல சொம்புல பால் வெச்சா குடிச்சிகிட்டிருக்கான். யார்

கொடுக்கறாங்கன்னே தெரியல. சில சமயங்கள்ள கைல மண்ணை அள்ளி அதை குங்குமம்னு சொல்லி கொடுக் கும் போது நிஜமாலுமே அது குங்குமமா இருக்குது. ஆகையால இவன் விஷயத்துல நாங்க யாரும் தலையிட்றதேயில்லை..."

அந்த நபர் சொல்லச் சொல்ல விஸ்வநாதனுக்கு தலையை சுற்றியது. மங்களமும் கண்ணீருடன் "வாசு... இவா என்னென்னவோ சொல்றாளேடா. என்னடா இதெல்லாம்" என்று கேட்டு கண்ணீர் உகுத்தாள்.

"சரி சரி... இன்னும் கொஞ்ச நாழி இருந்தா இவனை ஒரு மந்திரவாதின்னு கூட சொல்லிடுவா. புறப்படு" விஸ்வநாதன் துரிதப்படுத்தியபடி வாசுதேவனையும் கையைப் பிடித்து இழுத்தார்.

அடுத்த பத்தாவது நிமிடம் அந்த பிராந்தியத்தில் இருப்பவர்கள் வேடிக்கை பார்க்க விஸ்வநாதனின் கார் வாசுதேவனை அள்ளிப் போட்டுக் கொண்டு புறப்பட்டது.

**வி**ஸ்வநாதன் வீடு!

வாசுதேவனோடு அவர் திரும்பி விட்டதை அறிந்து பலரும் வந்து பார்த்தார்கள். கைகால்களில் உள்ள சங்கி லியை எல்லாம் அகற்றி அவனுக்கு வேட்டியையும் சட்டையையும் அணிவித்து ஒரு மாதிரி தேற்றியிருந்தார் விஸ்வநாதன். அவனோ இருவரையும் மாறி மாறி வெறித்துக் கொண்டிருந்தான். ஒருவார்த்தை கூட அவர் களை உணர்ந்து பேசவில்லை. நகத்தைக் கடிப்பதும், கைகளை முறுக்கிப் பிசைந்து கொள்வதுமாய் எங் கெங்கோ பார்த்தான். குட்டி போட்ட பூனை போல குறுக்கும் நெடுக்குமாக நடந்தான்.

"ஒரு நல்ல டாக்டர் கிட்ட காட்டுங்கோ..." என்று வந்தவர்களில் ஒருவர் விஸ்வநாதனுக்கு அட்வைஸ் செய்துவிட்டுப் போனார்.



விஸ்வநாதனுக்கும் அதுதான் உசிதமாகத் தோன்றியது.

"மங்களா... பேசாம அவர் சொன்ன மாதிரி ஒரு டாக்டர் கிட்ட காட்டுவோமா?"

"என்னன்னா கேள்வி இது... முதல்ல டாக்டரை கூட்டிண்டு வாங்கோன்னா..."

"அவரை கூட்டிண்டு வந்து காட்றத விட இவனை டிஸ்பென்சரிக்கு கொண்டு போய் அட்மிட் பண்றதுதான் சரின்னு படறது எனக்கு."

"ஏதோ ஒண்ணு... சட்டுன்னு செய்யுங்கோ..."

"அதுக்கு முந்தி எனக்கு இன்னொரு எண்ணம் தோணறது."

"என்ன?"

"சுகவனேஸ்வரர் கோவில் பிராம்மணரைப் போய் பார்த்து, நீங்க சொன்ன மாதிரி பிள்ளையாண்டான் கிடைச்சிட்டான். ஆனா அவன் சித்தம் கலங்கிப் போய் இருக்கான்னு சொல்லி அவராண்டையே வழி கேட்டா என்ன?"

"என்ன வேணா பண்ணுங்கோ... எனக்கு என் பிள்ளை நல்லபடியா திரும்பக் கிடைச்சா போதும்." மங்களம் துடித்தபடி சொன்னாள்.

விஸ்வநாதனும் புறப்படக் காலெடுத்தார். அதே சமயம் அவர் குடியிருப்பில் உள்ள ஃப்ளாட்களில் ஒரு கோஷ்டி புகுந்திருந்தது. தடிதடியாய் சில இளைஞர்கள். தாடி மீசை என்கிற முரட்டுத் தோற்றம். கையில் ஒரு ரசீது புத்தகம்.

விஸ்வநாதன் காரிடாரில் நடந்து படி இறங்கப் போகும்போது எதிரில் வந்தது அந்தக் கூட்டம்.

அவர்களில் ஒருவன் விஸ்வநாதனைப் பார்த்து எகத்தாளமாய் கேட்டான்.

"என்னா ஐயரே... எங்க பொறப்பட்டு போய்கிட்டிருக்கே?"

"அது... அது... ஒரு முக்கியமான விஷயமா வெளிய கிளம்பிண்டு இருக்கேன்."

"சரி... போறது போறே... ஒரு ஐநூத்தி ஒண்ணு நன்கொடை கொடுத்துட்டுப் போ."

"நன்கொடையா... எதுக்கு?"

"ஆங்... காரணம் சொன்னாதான் கொடுப்பியா. டேய் சொல்லுங்கடா..." அவன் வேறு ஒரு தடியனைப் பார்க்க அந்த தடியன் வாயில் எதையோ மென்றபடி இருந்தான்.

ப்ருச்ச் என்று பக்கத்து சுவற்றில் துப்பிவிட்டு "காரணம் தானே ஐய்யரே கேக்கறே நீ... சொல்றேன். நல்லா கேட்டுக்க... நம்ம தலைவருக்கு இந்த ஏரியால சிலை ஒண்ணு திறக்கப் போறோம். அதுக்குத்தான்..."

"யார் உங்க தலைவர்?"

"எங்க தலைவர் யார்னு உனக்கு தெரியாதாக்கும். மகாத்மா காந்தி! இப்ப என்னாங்கறே?"

அவன் விஸ்வநாதனை மிக நெருக்கமாக சமீபித்து எச்சில் முகத்தில் பட்டுத் தெறிக்க கேட்ட விதத்தில் அனல் பறந்தது.

இதற்குள் ஃப்ளாட் செகரட்டரி சீதாராமன் என்பவர் ஓடி வந்தார்.

"விஸ்வநாதன் சார்... அவாகிட்ட வளவளன்னு பேசாம அவா கேக்கறத கொடுத்துடுங்கோ..." என்று படபடத்தார்.

"என்னய்யா இது... ஐநூறு ரூபாங்கறது என்ன அஞ்சு பைசா பத்து பைசாவா விட்டெறிய... இப்படி இவங்க கேக்கும் போதெல்லாம் கொடுத்தா என்னத்துக்குய்யா ஆறது?"



"ஐய்யோ... நீர் விபரம் தெரியாம பேசறீர். முதல்ல பணத்தை தரேன்னு சொல்லுங்கோ. அப்புறம் மத்த விஷயத்தை பேசிக்கலாம்."

"முடியாது... நான் ஒரு வக்கீல். நானே இப்படி ரவுடித்தனத்துக்கு பயந்தா அப்புறம் யாரால என்ன பண்ண முடியும்?"

விஸ்வநாதன் கேட்ட மறுநொடி அவர் மேல ஒரு குத்து விழுந்தது. யார் அடித்தது என்று கூட தெரிந்து கொள்ள முடியாதபடி விஸ்வநாதனும் சுருண்டு கீழே விழ ஃப்ளாட்டுக்கு ஃப்ளாட் எட்டிப் பார்த்தார்கள். சீதாராமன் அலறத் தொடங்கி விட்டார்.

"இந்தாங்கடா... இதுகொஞ்சம் கூட நன்னால்லை. அப்புறமா நாங்க போலீசுக்கு போக வேண்டி வரும். நான் தான் பேசி அவரை கன்வின்ஸ் பண்ணிண்டு இருக்கேன்ல. இடையில இப்படி கையை ஓங்கினா என்ன அர்த்தம்?"

"என்னா அர்த்தமா...?" போலீஸ் கீலீஸ்னு டகுல் உட்டா கிழிச்சிப் பிடுவேன். நாங்க யார் தெரியும்ல?" அவர்களில் ஒருவன் காலரை தூக்கி விட்டபடி சீதாராமனை அடிப்பது போல நெருங்கி வந்தான். சீதாராமன் நடுங்கி விட்டார். விஸ்வநாதனும் கீழே விழுந்த நிலையில் இருந்து தட்டுத் தடுமாறிக் கொண்டு எழுந்து நின்றார். அதைப் பார்த்தபடியே ஓடி வந்து கொண்டிருந்தாள் மங்களம்.

"ஐய்யோ... என்னன்னா ஆச்சு. யாருண்ணா இவாள்ளாம்...?" நெருங்கி வந்தவள் விஸ்வநாதனை கட்டிக் கொண்டு கதறினாள். சப்தம் வாசுதேவனையும் எட்டிப் பார்க்க வைத்தது. அவன் எட்டிப் பார்க்கும் போது அந்த ரவுடிகளில் ஒருவன் மங்களத்தை விஸ்வநாதனிடம் இருந்து பிரித்து தனியே இழுத்தான்.

"என்னா மாமி... நீதான் இந்த ஆளோட தர்மபத்தினியா?" என்று இடக்காகவும் சிரித்தான்.

"டேய் அப்பா... வேண்டாம்டா. போயிடுங்கடா, ஐநூறு இல்ல ஆயிரம் கூட தர்றோம். போயிடுங்கடா. வேண்டாம்டா. இது நல்ல குடும்பங்கள் அமைதியா வாழற இடம்டா... சொன்னா கேளுங்கடா..."

சீதாராமன் நடுவில் கைகளைக் கூப்பிக் கொண்டு கெஞ்சத் தொடங்கினார். அது அவர்களில் தலைவனைப் போல் தெரிந்த கண்ணாயிரம் என்பவனைக் கொஞ்சம் கட்டுப்படுத்தியது.

"அய்யரே... நீ கெஞ்சறதால உட்டுட்டு போறேன். மொத்தம் எத்தினி வூடுங்க இருக்குதோ அத்தினி வூட்டுக்கு கணக்குப் போட்டு பணம் எங்களுக்கு வந்து சேரணும். இந்த மாசம் எங்க தலைவர் சிலை. அடுத்த மாசம் எங்க தலைவர் பிறந்த நாள் கொண்டாடப் போறோம். அப்ப ஏழைங்களுக்கு கஞ்சிகாச்சி ஊத்தப் போறோம். அதுக்கும் ஆளனுப்புவேன். அப்பவும் தரணும். எடக்கு மொடக்கா ஏதாவது பேசுனா பிச்சிப் பிடுவேன்..." என்றபடியே அந்த கண்ணாயிரம் என்பவன் அங்கிருந்து விலகத் தொடங்கினான். அவனோடு வந்தவர்களும் அவன் பின்னேயே சென்றனர். அப்படிச் செல்லும்போது வெளியே எட்டிப்பார்த்த ஒரு இள வயதுப் பெண்ணின் கன்னத்தை ஒருவன் வருடிக் கொடுக்க அந்தப் பெண்ணும் மான் குட்டியாட்டம் மருண்டு உள்ளே ஓடியது.

ஃப்ளாட் வாசலில் நின்று கொண்டு வெறிக்கப் பார்த்துக் கொண்டே இருந்தான் வாசு.

## 6

**கோ**யில் தோப்பு கல் மண்டபத்தில் படுத்திருந்தார் அந்த வேத பிராம்மணர். விஸ்வநாதன் வரவும் எழுந்து அமர்ந்தார்.

"நமஸ்காரம்."



"சொல்லுய்யா... எங்க இவ்வளவு தூரம்?"

"பெரியவா சொன்ன மாதிரி மண்டைக் காட்டுப் பக்கம் போய் என் புள்ளையாண்டானைப் பார்த்தேன்."

"சந்தோஷம்... உன்னை அடையாளம் தெரிஞ்சிண்டானா?"

"நீங்க எல்லாம் தெரிஞ்சவர். ஒண்ணும் தெரியாத மாதிரி கேட்டா என்ன அர்த்தம்."

"நான் எல்லாம் தெரிஞ்சவனா... நான் ஒரு பிச்சைக்காரன்பா."

"போறும். பெரியவா அப்படிப் பேசி என்னை ஆழம் பாக்க வேண்டாம். என் பையன் இப்ப ஒரு பைத்தியமா இருக்கான். அவன் குணமாகணும். அதுக்கும் நீங்கதான் வழிகாட்டணும்."

"அதனாலதான் தேடாம இருக்கறது நல்லதுன்னு சொன்னேன்."

"காசு பணமா இருந்தா தேடாம விட்டுடலாம். இது ரத்த சம்மந்தமுள்ள ஒரு விஷயம். அதுவும் ஒரே பிள்ளை. எப்படி எங்களுக்கென்னன்னு இருக்க முடியும்?"

"எப்பவுமே பாசத்துக்கு ரொம்ப சக்தி அதிகம். அது படுத்தற பாட்டுக்கும் குறைச்சலில்லை."

"உண்மைதான். பிள்ளை இப்படி இருக்கானேன்னு என்னை விட என் பொண்டாட்டி அதிகம் வருத்தப்பட்றா. நீங்க மனசு வெச்சா அவன் குணமாக முடியும்னு நம்பறா."

"அது சரி... இன்னிக்கு உன் வீட்டாண்ட ஏதுனா பிரச்சனையா?"

பெரியவர் ரவுடிகளின் கலாட்டாவை உணர்ந்தது போல கேட்டார்.

"ஆ... ஆமாம்... சில ரவுடிப்பசங்க ஒண்ணா வந்து ஆயிரத்தை கொடு, ஐநூறைக் கொடுன்னு ஒரே ரகளை... தெருவுலையும் நிம்மதியா நடமாட முடியலை..."

"எல்லாம் சரியாயிடும். உன் தெருவுல சக்தி சொரூபமா ஒருத்தி இருக்கா. அவளை அந்த ரவுடிப் பசங்க தொட்டாங்க. பாவம் அந்தப் பசங்க."

"நீங்க என்னென்னமோ சொல்றேளே... என் தெருவுல சக்தி சொரூபமா ஒரு பொண்ணா...?"

"ஆமாம். நவராத்திரியின் போது ஜனிச்சவ அவ. அவ பரம்பரையே அம்பாளுக்கு பூஜை பண்ணியிருக்கு. அந்த புண்ணிய பலத்தால் பொறந்தவதான் அவ. அவளப் போய் இந்த பசங்க தொட்டுடுட்டாங்க. அதான் நீ என்னைப் பார்த்தே. நானும் உன் பிள்ளை இருக்கற இடத்தை சொன்னேன்."

"நீங்க என்ன சொல்றேள்? எனக்கு ஒண்ணுமே புரியலை."

"இப்ப எதுவும் புரியாது. புரியவும் வேண்டாம். விதியோட விளையாட்டை நான் ஒருத்தன் புரிஞ்சுண்டு அவஸ்தைப் பட்றது போதும்..."

"பெரியவா இப்படி பூடகமாவே பேசிண்டு போனா எப்படி? சித்த புரியும்படி பேசுங்கோ..."

"புரியும்படியா... இப்பவா?" பிராம்மணர் கேட்ட தொனியே ஒரு மாதிரிதான் இருந்தது.

"இப்படி திருப்பிக் கேட்டா எப்படி? என் பையன் எப்ப குணமாவான்னுதான் நான் உங்களண்ட கேட்க வந்தேன். நீங்களோ ஏதேதோ சொல்றேள்."

"இன்னியில் இருந்து சரியா எட்டு நாள் செல்லட்டும். ஒன்பதாம் நாள் வா. அவன் குணமாகறத பத்தி பேசுவோம்."

"அது என்ன எட்டு நாள் கணக்கு?"

"அந்த ரவுடிப் பசங்க எட்டு பேர்தானே?"

"தெரியலை... நான் எண்ணலை."

"போய் எண்ணிப்பார். எட்டுப் பேர் இருப்பா. புராண காலத்துல உகரைவிட்ட அரக்கர்களான கம்சன், கம்பன்,



நிகம்பன், மகிஷாசுரன்கற அம்சங்கள் அவா. அவாள்ளாம் அழிஞ்சு முடியட்டும். அப்புறமா உன் பையன் குணப்பாட்டை பத்தி பேசுவோம்."

"அப்ப அந்த ரவுடிகள் அழியப் போறாளா?"

"ஆமாம். நாளுக்கொரு வதம். நடந்து முடியட்டும். பிறகு சொல்றேன்.

"ஒரு சந்தேகம்..."

"என்ன?"

"இந்த ஊர்ல இவாளைப் போல எவ்வளவோ ரவுடிகள். ஆனா இவா மட்டும் அழிஞ்சுடுவான்னு சொல்றேள். எதனால அப்படி?"

"இவாதானே சக்தியை சீண்டினவா?"

"அப்ப மத்தவா பண்ற குத்தங்கள் தீண்டல் இல்லையா?"

"லாஜிக் பேசறியா... சரி. உனக்கு புரியும்படி சொல்றேன். புரிஞ்சுக்க முடிஞ்சா புரிஞ்சுக்கோ. மனுஷனா பொறந்தவன் தன் செயல்களால தன் விதியை எழுதிக்கறான். அதை நல்லவிதமா எழுதிக்கறவாளும் உண்டு. கெட்ட விதமா எழுதிக்கிறவாளும் உண்டு. துஷ்டர்களால் கஷ்டப்படணும்னு யாருக்கெல்லாம் கர்மம் இருக்கோ அவாள்ளாம் கர்மம் காரணமாக கஷ்டப்படுவா. அவாளை கஷ்டப்படுத்தறதுக்காகத்தான் அந்த துஷ்டர்களும் இருக்கா. இது ஒரு விதம். இந்த துஷ்டர்கள் அழியற நேரம் வந்தா விதி இவாளை தப்பு பண்ண வைக்கும். அப்படித்தான் இவனுங்க அந்த பெண்கிட்ட தப்பு பண்ணினாங்க. அந்த தப்பு அவா விதியை முடிச்சு வைக்கப் போறது. இது இன்னொரு விதம் புரியலையா?"

"புரியலை... சுத்தமா புரியலை."

"சரி இன்னும் கொஞ்சம் சிம்பிளா சொல்றேன். மின்சாரத்தை தொட்டா என்ன ஆகும்.?"

"ஷாக் அடிக்கும்."

"ஷாக் அடிச்சா என்ன நடக்கும்?"

"உடம்பு கருகிப் போகும். உயிர் போகும்."

"இதுல ஆச்சரியப்பட எதாவது இருக்கா?"

"இல்லை."

"அந்த பொண்ணும் ஒரு மின்சாரம். அவளைத் தொட்டவங்களும் கருகித்தானே தீரணும்."

"உதாரணம் சரி... அது எப்படி அந்த பொண்ணு மட்டும் மின்சாரமா இருக்க முடியும். என் பொண்டாட்டியை கூட அந்த பசங்க தொட்டாங்க. என் பொண்டாட்டி சக்தி இல்லையா?"

"இந்த உலகத்துல இருக்கற ஒவ்வொரு பொண்ணுமே சக்திதான். இந்த சக்திகள்ள பல தரப்பட்ட அளவுல மின்சாரம் ஓட்றது. சிலர் ட்ரான்ஸ்ஃபார்மர் அளவுக்கு சக்தி படைச்சவா. இந்த டிரான்ஸ்ஃபார்மர்ல கை வைச்சா சாம்பலாவது மிஞ்சுமா?"

"எல்லோருமே சக்திங்கறேள். அதுல ஒருத்தருக்கு கூட, ஒருத்தருக்கு குறைச்சல்ங்கற அளவுல சக்தி இருக்க காரணம் என்ன?"

"இந்த கேள்விக்கு இப்படி உக்காந்துண்டு பதில் சொல்ல முடியாது. ஒரு பள்ளிக்கூடத்துல வாத்யார்ங்கறவர் எல்லாருக்கும் பொதுவாதான் கிளாஸ் எடுக்கறார். ஆனால் எல்லாருமா முதல் மார்க் வாங்கறா. சிலர்தானே வாங்கறா. அது ஏன்?"

"அதுக்கு பல காரணங்கள். கவனிக்கற தன்மை, வீட்டுக்கு வந்து படிக்கறதுன்னு, எவ்வளவோ விஷயங்கள் அதுக்கு பின்னால இருக்கு..."

"இதுவும் அப்படித்தான். ஒவ்வொரு சக்தியும் தன் சக்தியை உணர்ந்து செய்யற கர்மங்களோட அளவால இதெல்லாம் உண்டாகறது."

"இப்ப எனக்கு ஓரளவு புரியறது"



"புரிஞ்சுதா... இதுபோதும் இன்னிக்கு. நீ போய்ட்டு எட்டு நாள் கழிச்சு வா. அப்புறமா உன் பிள்ளையை பத்தி பேசுவோம்..."

"ஒரே ஒரு கேள்வி."

"என்ன?"

"இந்த எட்டு பேர் அழிவுக்கும் என் பிள்ளை குணமாகறதுக்கும் என்ன சம்மந்தம்? ஏன் நீங்க இன்னிக்கே அவன் குணமாகறது சம்மந்தமா எதுவும் சொல்ல மாட்டேங்கறேள்."

"எட்டு நாள் பொறுத்து வந்து இந்த கேள்வியைக் கேள். நான் பதில் சொல்றேன்."

அந்த பிராம்மணப் பெரியவா அழிச்சாட்டியமாக தன் கருத்திலேயே குறிப்பா இருந்தார். விஸ்வநாதனாலும் அதற்குமேல் அவரைத் துளை போட முடியவில்லை. அலுப்பாகவும் சலிப்பாகவும் இருந்தது. அதே சமயம் அவனிடம் சில அபூர்வ சக்திகள் இருப்பதாக மண்டைக் காட்டில் ஒருவர் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. அதைப் பற்றி மட்டுமாவது பேசி அது உண்மையா என்று கேட்டால் என்ன என்று தோன்றியது.

"பெரியவா கோவிச்சுக்கலேன்னா இன்னும் ஒரு கேள்வி" தயங்கித் தயங்கித்தான் ஆரம்பித்தார்.

"என்ன?"

"என் பிள்ளை புத்தி சுவாதீனமில்லாம இருக்கறதுக்கு நடுவுல அவனைப் பத்தி இன்னும் சில விஷயங்கள் கேள்விப்பட்டேன்."

"தெரியும்... மண்ணைத் தொட்டா அது குங்குமமா மாறும்னும், தண்ணியில தக்கை மாதிரி மிதக்கறான்னும் கேள்விப்பட்டிருப்பே..."

"ஆமாம்... ஆமாம்... அது மட்டுமில்ல... அடிக்கடி சொம்புல பால் குடிக்கறானாம். எங்கேருந்து யார்

கொண்டு வந்து கொடுக்கறான்னு தெரியலேன்னு கேள்விப்பட்டேன்."

"நீ கேள்விப்பட்டது கொஞ்சம்தான். அவன்கிட்ட இதுக்கும் மேலயும் சக்தி இருக்கு. அதை எல்லாமும் எட்டு நாள் கழிச்சு நீ தெரிஞ்சுப்பே."

"நீங்க எனக்கு அதிர்ச்சிக்கு மேல அதிர்ச்சி கொடுக் கறேள்."

"தப்பு... நீ முதல் முதலா இதைப் பத்தி தெரிஞ்சுக் கறதால உனக்கு இதெல்லாம் அதிர்ச்சி கொடுக்கற விஷயமா இருக்கு. ஆனா இந்த விஷயங்கள் அவன் கிட்ட பல வருஷமா இருக்கு."

பெரியவரின் பதில் மீண்டும் விஸ்வநாதனை கனக்கியது. அடுத்து என்ன கேட்பது என்கிற தடுமாற்றம் ஏற்பட்டது. இருந்தும் அதிலிருந்து மீண்டு "உங்களுக்கு எப்படி இதெல்லாம் தெரியும்?" என்கிற அவரைப் பற்றிய கேள்விக்கு வந்தார்.

"தெரிஞ்சுண்டு என்ன பண்ணப் போறே?"

"புரிஞ்சுக்கறதுக்காகத்தான் கேக்கறேன்."

"அஞ்சும் மூணும் எட்டுங்கற மாதிரி ஒரு புரியற கணக்கு விஷயம் இல்ல இது. உனக்கு சொன்னா புரியாது."

"முயற்சி பண்ணிப் பாக்கறேனே...?"

"முடியாது. சொன்னா கேளு. ஆடம்பாம்கற அணு குண்டு பத்தி தெரியுமா உனக்கு?"

"தெரியும்."

"அணுகுண்டு பத்தி தெரியும். அத எப்படி பண்றான்னு தெரியுமா?"

"அது எப்படி தெரியும்... அது டாப் சீக்ரெட்டான ஒரு விஷயம்னா...?"



"அது சரி... அதப்பத்தி சொன்னா புரிஞ்சுண்டு உன்னால அணுகுண்டு பண்ண முடியுமா?"

"முடியாது. அதுக்கு சைன்ஸ் தெரிஞ்சிருக்கணும். பல வருஷ அனுபவம் வேணும். நான் அணுகுண்டு பண்ண ணும்னா அது லேசுப்பட்ட விஷயம் இல்ல. நான் ஒரு வக்கீல். என்னோட சப்ஜெக்ட்லையே பல செக்ஷன் பத்தி எனக்கு தெரியாது. தெரிஞ்சுக்க எனக்கு கால அவகாசமும் இல்ல."

"நன்னா சொன்னே... என்னால எப்படி இதை எல்லாம் சொல்ல முடியும்னு கேட்டியே அதுவும் இப்படித்தான். சொன்னாலும் புரியாது. சுருக்கமா சொல்றேன். என்கிட்ட இருக்கற விஷயமும் ஒரு சைன்ஸ்தான். உன் பிள்ளை கிட்ட இருக்கற சித்திகளும் கூட சைன்ஸ்தான். ஆனா சொன்னா புரியாத ஒரு சைன்ஸ்."

அவர் அத்தனை விளக்கமாக சொல்லிவிட்ட பிறகு அதற்கு மேல் அவரிடம் தொடர்ந்து கேள்விகேட்க விஸ்வநாதனால் முடியவில்லை.

"நல்லது... நான் இப்ப கிளம்பறேன். எட்டு நாள் கழிச்சு வந்து பாக்கறேன்." என்றபடியே புறப்படலானார்.

காரை கிளப்பும்போது அந்த ரவுடிகள் எட்டு பேர்தானா என்று முதலில் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற கேள்விதான் மனதில் பிரதானமாக தோன்றியது அந்த சிந்தனையோடு காரை வளைத்தபோது எதிரில் மீண்டும் அந்த வேதப் பிராம்மணர். காரை தடுத்து நிறுத்தியபடி...

காரை நிறுத்திய விஸ்வநாதனும் எட்டிப் பார்த்தார். பிராம்மணரிடம் கேள்வி.

"உன் பிள்ளையை சங்கிலியெல்லாம் போட்டு கட்டித்தானே வெச்சிருக்கே?"

"இல்லை... அவனை அப்படிப் பார்க்க சகிக்கலை. அதனால அவுத்துட்டேன்."

"அப்படின்னா முதல்ல போய் அவன் கை காலுக்கு சங்கிலியைப் போட்டு கட்டி வை. அதுதான் உங்களுக்கு நல்லது."

"என்ன சொல்றேள். இந்த க்ஷணம் என் பிள்ளை ஒரு சித்த பிரமை பிடிச்சவன்னு சிலருக்குத்தான் தெரியும். சங்கிலியெல்லாம் போட்டா தெருவுக்கே தெரிஞ்சிடுமே"

"தெரியட்டும். அதுதான் அவனுக்கும் உங்களுக்கும் நல்லது."

"ஏன் அப்படி?"

"இனி நீ கேள்வி கேக்கக் கூடாது. போய் நான் சொன்னபடி நடங்கறேன்..."

அதட்டினார் பெரியவர். விஸ்வநாதனும் சம்மதம் என்கிற ரீதியில் தலையை ஆட்ட விலகி வழி விட்டார் காரும் கிளம்பியது!

மனதில் இனம் புரியாத ஒரு பயம்!

## 7

**வீ**ட்டுக்குள் நுழைந்த விஸ்வநாதன் முதலில் மகன் எங்கே என்றுதான் தேடினார். ஆளைக் காணவில்லை! மங்களத்திடம் வந்து பதறினார்.

"மங்களம்... வாசு எங்கே?"

"இங்கதானே இருந்தான்."

"இங்கதான்னா எங்கே?" கத்தினார்.

"இங்கதான்னா..." மங்களமும் அவரோடு சேர்ந்து தேடத் தொடங்கினாள். வீடு முழுக்க சுற்றி விட்டு வெளியே வந்தும் பார்த்தனர். எதிர் ஃப்ளாட்காரர் பேப்பர் படித்தபடி இருந்தார். அவரிடம் சென்று கேட்டார்.

"எங்க... என் மகன் வாசுவை பாத்தீங்களா?"



"இல்லையே..."

"ஐய்யோ... எங்க போய்ட்டான்?"

விஸ்வநாதனுக்கு உடம்பெல்லாம் பதறியது. மங்களமும் அதைப் பார்த்து பதறினாள்.

"இப்ப என்ன ஆய்டுத்துன்னு இப்படி பதர்றேள்?"

"முதல்ல வாசுவைக் கண்டுபிடி... அப்புறமா கேள்வி கேட்கலாம்..."

கத்திக்கொண்டே நாலாபுறமும் தேட ஆரம்பித்தார். அறுபது ஃப்ளாட்டுகள் கொண்டது அந்த அபார்ட்மெண்ட். அவ்வளவிலும் புகுந்து பார்த்தாகி விட்டது. எங்கேயும் வாசுதேவனைக் காணவில்லை. நேரம் செல்லச் செல்ல விஸ்வநாதனின் நெஞ்சுக்கூட்டில் இளைப்பு கூடிக் கொண்டே போனது. வியர்த்து வடியவும் ஆரம்பித்தது.

"என்னா... நம்ப பிள்ளை திரும்ப காணாம போய் விட்டானா? அவன் காணாம போயிடுவான்னுதான் அந்த பிராம்மணரும் சொன்னாரா?" என்று விசும்பலோடு கேட்டாள்.

"அதெல்லாம் இல்லை மங்களம். அவனை சங்கிலியால் கட்டி வையுங்கோ, அதுதான் உங்களுக்கு நல்லதுன்னார் அந்த பிராம்மணர்."

"ஏன்னா அப்படிச் சொன்னார்?"

"எந்த கேள்விக்கும் இப்ப என்னால பதில் சொல்ல முடியாது, எட்டு நாள் கழிச்சு வாங்கோன்னுட்டார்."

"அது என்ன எட்டு நாள் கணக்கு?"

"இதோ பார்... இப்ப நான் இருக்கற மனநிலைல இப்படி எல்லாம் கேள்வி கேட்காதே. நான் இதை விடவும் கூடுதலா அவரண்ட கேட்டு குழம்பிப் போய் வந்துருக்கேன். வாசு எங்கன்னு போய் முதல்ல தேடு..."

மீண்டும் மங்களத்தை ஒரு விரட்டு விரட்டி விட்டு விஸ்வநாதனும் வெளியில் செல்லக் காலெடுத்த

சமயம்... எதிரில் அனந்தர் காட்டு பரமானந்தர் வந்து கொண்டிருந்தார். பரமானந்தரே இப்படி நேரில் வருவார் என்று விஸ்வநாதன் துளி கூட எதிர்பார்க்கவில்லை.

"வாங்கோ... வாங்கோ..." என்று கைகளை கூப்பிய படியே வரவேற்றார்.

"விஸ்வநாதன்... காணாம போன உங்க பிள்ளை வாசுதேவன் திரும்பி வந்துட்டானாமே... நிஜமாவா?" வந்ததும் வராததுமாய் பரமானந்தர் வாசு பற்றித்தான் கேட்டார்.

"ஆமாண்ணா... இருபது வருஷம் கழிச்சு எப்படியோ அவனைக் கண்டுபிடிச்சு ஆத்துக்கும் கூட்டிண்டு வந்தேன். ஆனா வந்தவன் சும்மா வரலை. ஏகப்பட்ட சிக்கல்களோடதான் வந்துருக்கான்."

"இப்ப எங்கே அவன்?"

"அது ஒரு கதை. விலாவரியா உங்களோட பேச எனக்கு இப்ப அவகாசமில்லை. ரொம்ப கஷ்டப்பட்டு கண்டுபிடிச்சவனை திரும்ப தொலைச்சுட்டு நிக்கறோம் நாங்க."

"தொலைச்சுட்டீங்களா...?"

"ஆமாம். அவனை எப்படியாவது திரும்ப கண்டுபிடிச்சாகணும். அதுக்காகதான் கிளம்பிண்டிருக்கேன்."

"என்ன கொடுமை இது. இப்படியா அஜாக்கிரதையா இருப்பீங்க?"

"நீங்க எப்படி சொன்னாலும் சரி. முதல்ல அவனைக் கண்டுபிடிக்கணும். இல்லேன்னா பெரிய ஆபத்து."

"ஆபத்தா...?"

"போறுண்ணா. இப்ப எதையும் கேக்காதீங்கோ. சித்த வழியை விடுங்கோ. எங்களை தப்பாவும் எடுத்துக்காதீங்கோ. நான் உங்களை அப்புறமா உங்க யோக ஆஸ்ரமத்துல வந்து சந்திக்கறேன்."



விஸ்வநாதன் பாய்ச்சலோடு காரை நோக்கிப் போன போது அந்த அப்பார்ட்மெண்ட்டின் மொட்டை மாடியில் இருந்து ஒரு பாட்டி நடுங்கியபடி ஓடி வந்து கொண்டிருந்தாள். வருபவள் "விஸ்வநாதா..." என்று குரல் கொடுத்துக் கொண்டுதான் வந்தாள். விஸ்வநாதனும் தேங்கி நின்றார்.

மனசுக்குள் மீண்டும் ஒரு தடை என்கிற மாதிரி ஒரு அருவை. எரிச்சலாக வந்தது. ஆனால் ஓடி வந்த பாட்டியோ "விஸ்வநாதா... உன் பிள்ளையாண்டான் மாடில தண்ணித் தொட்டில மிதந்துண்டிருக்கான்" என்றாள். அடுத்த நொடியே விஸ்வநாதனுக்குள் ஆனந்த அதிர்ச்சி.

நாலு கால் பாய்ச்சலில் தனது எழுபது வயது முதுமையையும் மீறிக் கொண்டு ஓடினார். பின்னாலேயே எல்லோரும் ஓடினார்கள்.

**அ**ப்பார்ட்மெண்ட் மாடியில் அவ்வளவு பேருக்கும் தண்ணீர் சப்ளை செய்யும் தொட்டி. அதில் வழிய வழியத் தண்ணீர்! அந்த தொட்டியில் வானத்து சூரியனைப் பார்த்தபடி ஆடாமல் அசையாமல் பத்மாசன ஜாலத்தில் மிதந்து கொண்டிருந்தான் வாசு.

அவ்வளவு பேரையும் ஆச்சரியம் பிடுங்கித் தின்றது.

"வாசு..." மங்களம் அவனை நெருங்கி அலறினாள். அவனிடம் பதிலுக்கு எந்த பிரக்ஞையுமில்லை. அவன் பார்வை வானத்துச் சூரியன் மேலேயே இருந்தது.

ஒரு பாரமுள்ள மனிதன் எப்படி காலையும் கையையும் அசைக்காமல் இப்படி நீர் மேல் கிடக்க முடியும்? இது எந்த வகை யோகத்தோடு சேர்த்தி...?

பலருக்குள்ளும் பல மாதிரி கேள்விகள். ஆனால் பரமானந்தர் மட்டும் அவனை அப்படிப் பார்த்த நொடி ஏதோ புரிந்தது போல ஒரு சன்னமான சிரிப்பை உதிர்த்தார். அதை விஸ்வநாதனும் பார்த்தார்.

"அண்ணா... என்னண்ணா இது... இது எப்படி சாத்தியம்?"

"சாத்தியம்தான் விஸ்வநாதன். இது ஒண்ணும் பிரமாத மில்லை. உடம்பை காத்தாக்கிக்கிறது ஒருவித யோகம். ரொம்ப அபூர்வமா அது யோகம் பண்ற சிலருக்கு வசப்படும். நீங்க வாங்க. மிச்சத்தையும் சொல்றேன்."

"இங்க இவனை இப்படியே விட்டுட்டு வரச் சொல் றேளா?"

தைரியமா வாங்கோ... அவன் எங்கேயும் போக மாட்டான். அதான் இவ்வளவு பேர் இருக்காங்களே..."

"பரமானந்தர் விஸ்வநாதனை கையைப் பிடித்து இழுத்துச் செல்லத் தொடங்கினார்.

"மங்களம்... நீ இங்கேயே இருந்து அவனை பத்ரமா கூட்டிண்டு வா" என்று சொன்னபடியே விஸ்வநாதனும் பரமானந்தரோடு நடக்க ஆரம்பித்தார்.

## 8

**வீ**ட்டுக்குள் தாடியை நீவியபடியே பேச ஆரம்பித் திருந்தார் பரமானந்தர்.

"விஸ்வநாதன் நீங்க இனிமே உங்க பிள்ளையை பத்தி கவலைப்பட வேண்டாம். அவனைப்பார்த்தா ஒரு ராஜ யோகி மாதிரிதான் என் கண்ணுக்குத் தெரியறான்."

"நான் என் பிள்ளை இப்படி ஒரு யோகியா இருக்கனு மல்லாம் ஆசைப் படலைண்ணா. உங்க கிட்ட கூட அவன் திருந்தி வழிக்கு வரணும்னுதான் அனுப்பிச்சேன். ஆனா அவன் இப்படி சாமியாராவே மாறுவான்னு நினைக்கலை."



"பதட்டப்படாதீங்க... இந்த இருபது வருஷத்துல அவன் எங்க இருந்தான்... என்ன செய்துகிட்டிருந்தான் ஏதாவது தெரிஞ்சதா?"

"அவன் எங்களையே இன்னும் தெரிஞ்சுக்கலைண்ணா. சித்த பிரமை பிடிச்ச மாதிரி இருக்கான்."

"அப்ப எப்படி இவனை கண்டு பிடிச்சீங்க?"

"அது ஒருகதை. ஒண்ணாம் தேதி புது வருஷமா இருக்கேன்னு கோவிலுக்கு போனோம். போன இடத்துல ஒரு பிராம்மணர் பிச்சை எடுத்துண்டிருந்தார். அவர் பெரிய உபாசகர் போல இருக்கு. எங்கு குறையை தெரிஞ்சுண்டு வாசு இருக்கற இடத்தை சொன்னார்..." விஸ்வநாதன் நடந்ததையெல்லாம் அப்படியே ஒப்புவிக்க ஆரம்பித்தார். அவர் அவ்வளவையும் சொல்லி முடிக்க வும் மங்களம் ஈரம் சொட்டச்சொட்ட வாசுதேவனோடு உள்ளே நுழையவும் சரியாக இருந்தது.

பரமானந்தரிடம் அழுத்தமான மௌனம்.

பார்வையும் வாசுதேவனைப் பார்த்தது. அவனும் அவரைப் பார்த்தான். ஆனால் உணர்ந்து கொண்டது போல இல்லாமல் முறைப்பாக பார்த்தான்.

"என்ன வாசு அப்படிப் பாக்கறே? என்னைத் தெரியலியா உனக்கு?" பரமானந்தர் கேட்கவும் அவரை நெருங்கினான். சட்டென்று பற்களை நறநறத்தவன் அவரது கழுத்தை எகிறிப் பிடித்தான். விஸ்வநாதனும் மங்களமும் அதைப் பார்த்து பதறிப் போய்விட்டனர்.

"டேய்... விட்றா! விட்றா... அவரை விட்றா... விட்றான்னா..." விஸ்வநாதன் நடுவில் புகுந்து அவனை விடுவித்தார். அப்படியே ஓடிப்போய் கழட்டிப் போட் டிருந்த சங்கிலிகளைக் கொண்டு வந்து அவனை திரும் பக் கட்டிப் போட்டார்.

ஃப்ளாட்வாசிகள் பலரும் பார்த்துக் கொண்டிருந்தார் கள்.

"எல்லாரும் போங்கோ... தயவு செய்து போங்கோ." என்று அவர்களையும் துரத்திவிட்டு தலையில் கை வைத்தபடி வந்து சோபாவில் விழுந்தார்.

பரமானந்தர் பார்த்தபடி இருந்தார். மங்களம் கண்ணீர் விட்டாள்.

"விஸ்வநாதன்... தைரியமா இருங்கோ. எல்லாம் நல்லதுக்குன்னு நினைச்சுக்கோ..." பரமானந்தர் ஆறுதலாய் பேசினார்.

"எப்படிண்ணா தைரியமா இருக்க முடியும். எப்ப எதைப் பண்ணுவான்னு தெரியலியே..."

"அது சரி... எல்லாம் எட்டு நாள் தானே? அப்புறம் தான் அந்த பிராம்மணர் எல்லா சிக்கலுக்கும் வழியே சொல்லிடப் போறாரே..."

"அவர் சொல்றது இருக்கட்டும். அதுக்குள்ற என்னென்ன நடக்குமோன்னு தெரியலியே..."

"எல்லாம் நல்லதுதான் நடக்கும். கவலைப்படாம இருங்கோ. வாசுகிட்ட ஏதோ ஒரு அபார சக்தி இருக்கு..."

"ஒரு அபார சக்தியும் எங்களுக்கு வேண்டாம்ணா. எங்க பிள்ளை எல்லாப் பசங்களையும் போல எங்களுக்கு கிடைச்சா போதும்."

"கிடைப்பான். நம்பிக்கையா இருங்கோ..."

"இவ்வளவு சொல்றேளே... இவன் ஏன் இப்படி ஆனான்னு உங்களுக்கு தெரியலையா. நீங்களும் ஒரு யோகிதானே?"

"வாஸ்தவம்தான். நான் உடம்பை புடம் போட்ற ஒரு யோகி. அந்த பிராம்மணரைப் போல மனசை மந்திரம் அதனால சாகஸம்னு விரிவடையாதவன், இருந்தும் சொல்றேன். வாசுவுக்கு ஏற்பட்டுருக்கற சித்த கலக்கம். அவன் ஏதோ ஒரு யோகப் பயிற்சியை தப்பா செய்ததால ஏற்பட்டிருக்கலாம்."

"அப்படியெல்லாம் கூட ஆகுமா என்ன?"



"தாராளமா... எதுக்கு குருவேணும்னு சொல்றோம். குருவோட நேரடி கண்காணிப்பும், வழிகாட்டுதலும் இல்லாத நிலையில், புத்தகங்களைப் படிச்சும், சிலர் செய்யறத பார்த்தும் செய்யற யோகப் பயிற்சிகள் விபரீதத்துல கொண்டு போய் விட்டுரும்.

குறிப்பா தப்பான மூச்சுப் பயிற்சியால பலருக்கு காது கேட்காம போயிருக்கு. பிராணக் காற்று குப்புன்னு தலைக்கேறிடும். அதேபோலதான் ரத்த ஓட்டத்துல வேகம் ஏற்பட்டு அதுவும் சித்தத்தை பாதிச்சிடும்."

"அப்படின்னா அதிசய சக்திகள் மட்டும் எப்படி சாத்தியம்?"

"அதுதான் எனக்கும் புரியலை. இவன் அன்னிக்கு பிரம்மானந்தர்ங்கற சக்தி உபாசகர் பின்னாலதான் போனான். அந்த ஆள் கூட ஒரு அரைகுறை உபாசகன் தான். அஷ்டமாசித்திகளை வசப்படுத்திட்டேன்னு குதிச்சுண்டு கிடந்தான். சாதாரணமா அஷ்டமா சித்தியடைஞ்சவங்க ரொம்ப பேசமாட்டாங்க. ஒண்ணும் தெரியாத மாதிரி தான் இருப்பாங்க. இன்னும் சொல்லப் போனா பாக்கச் சகிக்காத ஒரு பிச்சைக்காரனைப் போலக்கூட இருப்பாங்க. தங்களை நாலு பேர் பார்க்கணும், மதிக்கணும்னுல்லாம் எதிர்பார்க்க மாட்டாங்க.

ஆனா அந்த பிரம்மசித்தன்ற மனுஷர் அப்படி இல்லை. ஆகையால் அந்த ஆள் கிட்ட தப்பா பயிற்சி எடுத்து இப்படி பிரமை பிடிச்சிருக்கலாம்னு நான் நினைக்கறேன். அதேசமயம் சில சித்திகளும் வசப்பட்டுருக்கலாம்" பரமானந்தரின் பதில் கொஞ்சம் போல விஸ்வநாதனுக்கு தெளிவைத் தந்தது.

"எது எப்படியோ... என் மகன் குணமாகி எங்க கூட இருந்துட்டா போதும்ணா..." என்றார் மிகப் பரிதாபமாக...

"பார்ப்போம்... அந்த பிராம்மணர் சொன்னபடி பார்த்தா இந்த எட்டு நாள்ல ஏதேதோ நடக்கப் போற மாதிரி தெரியுது. என்ன நடக்குதுன்னு பாப்போம்."

"ஒண்ணு நிச்சயம். அந்த ரவுடிப் பசங்க அழியப் போறாங்க!"

"வார்த்தையை விடாதீங்க விஸ்வநாதன். வேடிக்கை மட்டும் பாருங்க."

"வேற வழி... ஆமா பிரம்மசித்தர்னு ஒரு அரைகுறை உபாசகர். அஷ்டமாசித்து அப்படி இப்படின்னீங்களே.. அஷ்டமாசித்து பத்தி கேள்விப்பட்டிருக்கேன். அஷ்டமா சித்திங்கறது என்னென்ன?"

"எட்டு விதமான சித்திகளை அடையறதுக்கு பேர்தான் அஷ்டமாசித்து. அது ஒவ்வொண்ணுக்கும் ஒரு பேர் உண்டு. அணிமான்னு வரிசையா ஒவ்வொண்ணும் ஒரு விதம். எனக்கே தெளிவாத் தெரியாது. அது சாக்தம் சம்மந்தப்பட்டது.."

"சாக்தமா... அப்படின்னா?"

"சக்தி வழிபாடுதான் சாக்தம்."

"சைவம், வைணவம் மாதிரியா?"

"ஆமாம். சாக்தமும் அந்த மாதிரி ஒரு பாதை. ஒரே குறியா அம்பிகையை தியானம் பண்ணி உபவாசம், விரதம்னு இருந்து அடைய வேண்டிய விஷயம்..."

"கரெக்ட்... அந்த பிராம்மணர் கூட இப்படித்தான் எதேதோ சொன்னார். இந்த தெருவுல சக்தி அம்சமுள்ள ஒரு பெண் இருக்கா. அவளை அந்த ரவுடிப் பசங்க தீண்டிட்டாங்க. அவளைத் தீண்டினா அது மின்சாரத்தை தீண்டின மாதிரி கருகிப் போய்தான் தீரணும்னுல்லாம் சொன்னார்..."

"அப்ப எப்படி கருகிப் போறாங்கன்னு பார்ப்போமே..."

"எல்லாமே மலைப்பா இருக்குண்ணா. இந்த உலகத்துல தான் நமக்கு புரியாத விஷயங்கள் எத்தனை... எத்தனை...?"



விஸ்வநாதன் ஆயாசிக்க பரமானந்தர் அதைக் கேட்டு சிரித்தபடி "அப்ப நான் கிளம்பறேன்" என்று புறப்பட ஆயத்தமானார்.

"சந்தோஷம்ணா... நீங்க வந்ததுல கொஞ்சம் எனக்கு தெம்பு வந்துருக்கு."

"உங்களைப் பாத்ததுல எனக்கும் பல உண்மைகள் தெரிய வந்துருக்கு. எல்லாம் எட்டாம் நாள் முடிஞ்ச உடனே பரிபூரணமா புரிஞ்சுடும்."

சிரித்துக் கொண்டே பரமானந்தர் புறப்பட்டு போக, கதவைத் தாழிட்டு விட்டு வந்து திரும்பவும் சோபாவில் விழுந்தார் விஸ்வநாதன். எதிரில் கூரிய பார்வையோடு மங்களம் தனி அறை ஒன்றில் சங்கிலிப் பிணைப்பில் கட்டப்பட்டவனாக வாசுதேவன்.

"என்ன மங்களம்... எதுக்கு இப்படி பாக்கறே?"

"பாக்காம... அண்ணாகிட்ட பல விஷயம் பேசியிருக்கேள். என்கிட்ட எதையுமே சொல்லலியே..."

"எங்க நேரம் கிடைச்சது. இப்பதானே அக்கடான்னு உக்கார முடிஞ்சுது. இப்ப கேள் சொல்றேன்."

"இந்த தெருவில சக்தி அம்சமுள்ள பொண்ணு யாரோ இருக்கா. அவளை இந்த ரவுடிப் பசங்க தீண்டிட்டதா சொன்னேளே... அது சங்கரியைதானே?"

"சங்கரியா...?"

"ஆமாம்னா... ஸ்ரார்த்த பிராம்மணர் மீனாட்சி சுந்தரமய்யர் பொண்ணு சங்கரியை தான் சொல்றேன்."

"அவ சக்தி அம்சம்னு உனக்கு யார் சொன்னா?"

"தெருவே பேசிக்கறதே. நீங்க கேள்விப்பட்டதில்லையா?"

"என்ன பேசிக்கறது...?"

"அவ நவராத்திரியின் போது பொறந்தவளாம். அவளுக்கு கல்யாண பிராப்தமே கிடையாதாம். அதே சமயம் அவ மேல அம்பாள் வருவாளாமே..."

"அப்படியா?"

"ஆமாம். தினம் தவறாம கோவிலுக்கு போய்ட்டு வர்ற அந்த பெண்ணான்ட இந்த பசங்க ஒருநாள் கலாட்டா பண்ணியிருக்கானுங்க. ஒருத்தன் கட்டிப் பிடிச்சு முத்தம் கூட கொடுத்துட்டான்னா பாத்துக்குங்களேன்!"

"மங்களம்... நீ சொல்றது உண்மையா?"

"என்ன உண்மையா... அரசல் பொரசலா காதுல விழுந்தது. அதான் சொன்னேன். அதே சமயம் எப்ப அந்த பொண்ணை அந்த பசங்க கலாட்டா பண்ணாங்களோ அப்ப இருந்து அந்த பொண்ணு அவ ஆத்துல உபவாசம் இருக்காளாம். என்னான்ட தப்பா நடந்துண்ட பசங்க ஒண்ணு திருந்தணும். இல்ல செத்து ஒழியணும். இந்த இரண்டும் நடக்கற வரை பச்சத் தண்ணி கூட குடிக்க மாட்டேங்கறதுதான் அந்த பொண்ணோட இப்போதைய ஸ்டேண்ட்."

"ஓ... அதான், அந்த பசங்க அழியற நேரம் வந்துடுத்துன்னு சொன்னாரா அந்த பிராம்மணர்?"

"அப்ப அந்த பசங்க அழியப் போறாங்களா... எப்படிண்ணா...?"

"யாருக்குத் தெரியும்... நம்மைச் சுத்தி என்னென்னவோ நடக்கறது. இதை எல்லாம் எந்த கணக்குல எடுத்துக்குறதுன்னே எனக்கு தெரியல.

சரி... யாரோ எப்படியோ போகட்டும். நம்ம வாசுவை நம்ம ஜாக்கிரதையா பாத்துப்போம். அவன் உள்ள தானே இருக்கான்.?"

"ஆமாண்ணா..."



விஸ்வநாதன் சந்தேகத்தோடு எழுந்து போய் ஜன்னல் வழியாகப் பார்த்தார். சங்கிலிப் பிணைப்போடு விஸ்ராந்தியாக அமர்ந்திருந்தான் வாசு.

எப்படி எப்படியோ, இருக்க வேண்டியவன், தன் வீட்டிலேயே ஒரு ஜெயில் கைதியைப் போல அவன் இருப்பதைப் பார்க்கவும் நெஞ்சையடைத்தது.

ஈஸ்வரா என்றது உதடு!

## 9

**வீதியின் முனை!**

அந்த முனையில் ஒரு அசோக மரம். மரத்துக்கு கீழே ஒரு பஸ் ஸ்டாப் ஷெல்டர். ஷெல்டரில் பயணிகள் அமருவதற்கு தோதாக சிமெண்ட்டுப் பெஞ்சுகள். அதில் அந்த ரவுடிகளில் நான்கு பேர் மட்டும் நெருக்கமாக அமர்ந்து கொண்டு சீட்டு விளையாடிக் கொண்டிருந்தனர்.

அதனால் பயணிகள் அங்கு நிற்பதற்கு தயங்கியபடி சற்று தள்ளி நின்று கொண்டிருந்தனர். அதில் ஒரு இளம் பெண்ணும் இருந்தாள். அவள் ஏறிச் செல்ல வேண்டிய பஸ் வராத நிலையில் டென்ஷனோடு நின்று கொண்டிருந்தாள்.

சினிமா நடிகை போல நேர்த்தியான உடல்வாகு. தோளில் ஒரு வார் பிடித்த லெதர் பேக். வேலைக்கு போய் விட்டு வீட்டுக்கு திரும்புகின்றவள் என்பது பார்த்த உடனேயே தெரிந்தது.

ஒரு பஸ் வந்தது. ஆனால் அவள் எதிர்பார்த்த பஸ் இல்லை அது. அந்த பஸ்ஸில் காத்திருந்த கூட்டம் ஏறிக் கொள்ள அவள் மட்டும் தனித்து விடப்பட்டாள். தெருவும் வெறிச்சோடிக் கிடந்தது.

இதுதான் சந்தர்ப்பம் என்கிற மாதிரி சீட்டு விளையாடிக் கொண்டிருந்தவர்களும் அவள் பக்கம் பார்வையைத் திருப்பினர். அவளுக்கு குப்பென்று வியர்த்து விட்டது.

இனி அங்கு நிற்பது ஆபத்து என்று அவள் மூளையிலும் சிகப்பு விளக்கு எரிந்து எரிந்து அணைந்தது. உடனேயே நடக்கத் தொடங்கிவிட்டாள்.

"ஏய் நில்லு..." ஒரு ரவுடி கத்தினான். அவள் நிற்காமல் வேகமாக நடக்க ஆரம்பித்தாள். அவர்களும் பின்னாலேயே துரத்தத் தொடங்கினார்கள். அப்பொழுது எதிரில் ஸ்கூட்டரில் ஒருவன். அவனைப் பார்த்தவள் சரேலென்று மறித்து ஸ்கூட்டர்காரனை நிறுத்தினாள்.

"சார்... ஹெல்ப் பண்ணுங்க சார். இந்த ரவுடிங்க என்னைத் துரத்தறாங்க..." அவள் சுட்டிக்காட்ட அந்த ரவுடிகளும் வாயில் சிகரெட் புகையோடு அவனையும் அவளையும் சுற்றி வளைத்து நின்றனர். அந்த ஸ்கூட்டர்காரருக்கும் இள வயது. இருந்தும் பயமும் பதட்டமும் அவனை ஆக்ரமித்தது.

"சார். ஹெல்ப் பண்ணுங்க சார். ப்ளீஸ் சார்." கெஞ்சினாள் அந்தப் பெண்.

"ஸ்கூட்டர்ல ஏறும்மா..." அவன் வேகமாக சொல்லி விட்டு அவள் ஏறவும் ஸ்கூட்டரைக் கிளம்பினான். அதுவும் மிக வேகமாக... அதற்குள் ஒருவன் எகிறி ஹேண்டில் பாரைப் பிடித்து இழுக்க ஸ்கூட்டர் தடுமாறியபடி பக்கவாட்டில் சரிந்தது. அந்தப் பெண்ணும் அவனும் கீழே விழுந்தனர். அவன் சுதாரித்தபடி எழுந்தவனாய், "பிரதர்... இது உங்களுக்கே நல்லா இருக்கா. வேண்டாம் பிரதர் விட்றுங்க. பிரதர்." என்றான் பதட்டமான குரலில்.

ரவுடிகளில் பீட்டர் என்றவன் அவன் பதட்டப்படுவதை ரசித்தபடியே அவனை சமீபித்தான். சிகரெட் புகையையும் முகத்தில் ஊதியவன்.



"என்னடா பெரிய ஹீரோன்னு நினைப்பா...?" என்றான் நக்கலாய்.

"பிரதர்... அதெல்லாம் ஒண்ணுமில்ல பிரதர். தப்பா எடுத்துக்காதீங்க பிரதர்."

"அப்புறம் ஏன்டா இவளோட ஓடப் பார்த்தே?"

"தப்புதான் பிரதர்... விட்றுங்க பிரதர். ப்ளீஸ் பிரதர்!"

"யாருடா நீ... ?"

"நான் ஒரு மெடிகல் ரெப் பிரதர். என் பேர் மோகன்!"

"கல்யாணமாயிடுச்சா?"

"இ... இ... இல்ல பிரதர். வீட்ல பொண்ணு பாத்துகிட்டிருக்காங்க..."

"எந்த ஊர்...?"

"கு... கு... கும்பகோணம்."

"இங்க எங்க தங்கியிருக்கே?"

"ராயல் லாட்ஜ்ல ஒரு ரூம் எடுத்து தங்கியிருக்கேன்."

"அப்ப உன்னை நாங்க இப்ப குத்துனா ஏன்னு கேட்க ஆள் இல்லைன்னு சொல்லு."

"ஐயோ... என்ன குத்தப் போறீங்களா?"

அவன் பதற அவர்களும் அவனை கலாய்க்க இடையில் அந்தப் பெண் பின்னங்கால் பிடரியில் பட வீதியில் ஓடத் தொடங்கி விட்டாள்.

அவளை துரத்திக் கொண்டு இரண்டு பேர் ஓட, மீதி இருக்கும் இரண்டு பேரில் பீட்டர் என்பவனும், கபாலி என்பவனும் ரெப் இளைஞனின் கழுத்துச் சங்கிலி, மணி பர்ஸ் ஸ்கூட்டர் என்று ஒவ்வொன்றையும் பிடுங்கினர்.

"பிரதர்... இதை எல்லாம் எடுத்துக்குங்க. என்னை மட்டும் விட்றுங்க பிரதர்" அவனிடம் நடுக்கமான குரலில் கெஞ்சல்.

"விட்டுட்டா நேரா போலீசுக்கு போய் கம்ப்ளைண்ட் பண்ணுவியே. உன்னை விட நாங்க என்ன கேனப் பயலுங்களா?"

பீட்டர் என்பவன் கேட்ட மறுநொடியே அவனது பிச்சுவா கத்தி அந்த இளைஞனின் அடி வயிற்றில் ஏறியது.

கண்ணிரண்டும் நிலைக்குத்திக் கொள்ள, உதடு பிளந்து 'ஹக்' என்று ஒரு சப்தமும் வெளிப்பட, சுருண்டு விழத் தொடங்கினான் அந்த இளைஞன். அடுத்த நொடி அவனது ஸ்கூட்டரில் ஏறி அந்த ரவுடிகள் பறந்து விட்டனர்.

போலீஸ் வந்தபோது கூட்டம் கூடியிருந்தது.

மெடிக்கல் ரெப் இளைஞன் விரைத்து பிணமாக கிடந்தான்.

"அநியாயம்... ஆனாலும் இது அநியாயம்..." கூட்டத்திடம் முணுமுணுப்பு. சிலர் உதடுகள் பல்லி போல பச்ச் பச்ச் என்று செருமின.

போலீஸ் எந்திரமாக இயங்கி இளைஞனின் பிணத்தை ஆம்புலன்சில் ஏற்றிக் கொண்டு செல்லத் தயாரானது.

சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் பெயருக்கு விசாரணை நடத்தினார்.

"இந்த கொலை எப்படி நடந்ததுன்னு யாருக்காவது தெரியுமா?"

கூட்டத்திடம் மௌனம்.

"தைரியமா பேசுங்க. இல்லேன்னா நாளைக்கு உங்களுக்கு இப்படி நடக்கலாம். இது ஒரு தொடர்கதை ஆயிடும்."

அந்த கருத்துக்கு நல்லவேளையாக பலன் கிட்டியது. ஒரு வயதானவர் வாயைத் திறந்தார்.

"சார். இது அந்த சங்கரன் கோஷ்டியோட வேலை!"



"சங்கரன் கோஷ்டின்னா... எத்தனை பேர் இருந் தாங்க...?"

"உங்களுக்கு தெரியாதா சார்... அவங்க கோஷ்டில எப்பவும் எட்டு பேர்தானே இருக்காங்க."

"நல்லா தெரியுமா?"

"தெரியும் சார். சாரங்கன், கபாலி, பீட்டர், ஸ்ரீராம், ரஞ்சன், அரிவா மாரி, கண்ணாயிரம், முத்துசாமி.

"இங்க சொன்னா போதாது. கோர்ட்டுக்கு வந்து சொல்லணும். சொல்வீங்களா?"

"நீங்க கேக்கறத பார்த்தா அங்கல்லாம் வந்து சொல்ல மாட்டோம். அதனால இங்கேயும் சொல்லாதீங்கன்னு சொல்ற மாதிரி தெரியுதே."

"என்ன பெரிசு... நான் கேள்விகேட்டா என்கிட்டையே பதில் கேள்வியா?"

"என்ன சார் பண்றது. நீங்க கேட்ட விதம் அப்படி."

"அப்படியா... கொஞ்சம் விட்டா அந்த கோஷ்டியை வளர்த்து விட்றதே நாங்கதான்னும் சொல்வீங்க போல தெரியுதே..."

"அதுல ஒண்ணும் உண்மை இல்லாம இல்லையே."

பெரியவர் ஆறிலும் சாவு- நூறிலும் சாவு என்று துணிந்து விட்ட மாதிரி பேசினார். சப் இன்ஸ்பெக்டரும் முறைத்துப் பார்த்துவிட்டு அவர் பேரைக் கேட்டார்.

"உங்க பேரென்ன?"

"சண்முகசுந்தரம். என்னால இனியும் இந்த அக்ரமத்தை பொறுத்துக்க முடியாது. என் உயிர் போனாலும் பரவாயில்ல. நான் ஹைகோர்ட், சுப்ரீம் கோர்ட்டுன்னு எங்க வேணா வந்து சாட்சி சொல்றேன் எழுதிக்குங்க..."

சப்இன்ஸ்பெக்டருக்கு வேறு வழி இல்லாமல் போய் விட்டது போல அவர் சொன்னதை எழுதிக் கொண்டார். ரெப் இளைஞன் பிணமும் மார்ச்சுவரி நோக்கி புறப்பட்டது.

போலீசும் பிணமும் சென்ற நிலையில் அந்த பெரியவரை சிலர் பிடித்துக் கொண்டனர்.

"உங்களுக்கு எதுக்கு சார் வயசான காலத்துல இந்த வம்பெல்லாம்...?"

"அப்ப ஊமையா இருக்கச் சொல்றீங்களா?"

"இப்ப நீங்க பேசிட்டதால அந்த ரவுடிகளைப் பிடிச்சு ஜெயில்ல போட்டுடப் போறாங்களாக்கும். சாட்சி சொல்லப் போறது தெரிஞ்சு உங்களையே தீர்த்துக் கட்டப் போறாங்க. பாத்துகிட்டே இருங்க!"

பெரியவருக்கும் அந்தப் பதில் வயிற்றைக் கலக்கத் தான் செய்தது.

"பார்ப்போம்... பயந்து பயந்து பல நாள் வாழறதுக்கு மனசாட்சியோட உண்மை பேசி கொலையாகிச் சாகறது நல்லதுதானே?"

திருப்பிக் கேட்டார். ஆனால் அந்தக் கேள்வியில்தான் சுரத்தே இல்லை!

## 10

நள்ளிரவு!

வாசு தன் உடம்பை ஆக்ரமித்திருந்த சங்கிலிக் கட்டைப் பார்த்தான். கண்ணி கண்ணியாக வளைத்துக் கட்டியிருந்த அந்த இரும்புக் கூட்டம் அவன் கண்களை உறுத்தியது. வெறித்தும் முறைத்தும் பார்த்தான். அப்படி அவன் பார்க்கத் தொடங்கிய நொடி, ஒவ்வொரு கண்ணியும் ஏதோ குண்டு வைத்து தகர்த்த மாதிரி தெறித்து அவனுக்கு விடுதலையைத் தந்தன.

கைகால்களை சோம்பல் முறித்துக் கொண்டு எழுந்து நின்றான். பின் வெளியில் வந்தான். விஸ்வநாதனும், மங்களமும் பெட்ரூமில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந் தனர்.



மெல்ல நடந்து சென்று கதவைத் திறந்தான். பின் கதவை தாழிட்டுக் கொண்டு அபார்ட்மெண்ட் காரிடாரில் நடக்க ஆரம்பித்தான்.

கும்மிருட்டு... அப்பார்ட்மெண்ட் வாட்ச்மேன் மெயின் ரோட்டை ஒட்டி குறட்டையில் இருந்தான். அவனைத் தாண்டிச் செல்வது மிக சுலபமாக இருந்தது. அதே சமயம் எதிரில் நைட் ஷிப்ட் முடிந்து வந்து கொண்டிருந் தார் அப்பார்ட்மெண்ட் வாசிகளில் ஒருவரான அருணா சலம். வாசு விஸ்ராந்தியாய் நடந்து செல்வதை ஆச்ச ரியத்தோடு பார்த்தபடியே அபார்ட் மெண்ட்டுக்குள் நுழைந்தார்.

ஜி.ஹெச்.

மார்ச்சுவரியில் விளக்குகள் அணைக்கப்பட்டிருக்க, மார்ச்சுவரியைச் சுற்றிலும் ஒரு ஈ காக்கை கூட இல்லை. மார்ச்சுவரி ஸ்வீப்பர் ஒருவன் மட்டும் மார்ச்சுவரிக்கு வெளியே ஒரு நாற்காலியில் அரைத் தூக்கத்தில் இருந் தான்.

சுச்சிதமாக அந்த ஸ்வீப்பர் முன் ஒரு உருவம் வந்து நின்றது. மெல்லிருட்டில் நிற்பது யார் என்று சரியாகத் தெரியவில்லை. வெளிச்சம் கசியும் ஒரு ட்யூப்லைட் டுக்கு கீழே வந்தபோதுதான் தெரிந்தது வந்திருப்பது வாசு என்று.

விரைப்பாக யாரையோ தேடிக் கொண்டு வந்தவன் மார்ச்சுவரியின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான்.

உள்ளே வெள்ளைத் துணியால் மூடப்பட்ட நிலையில் ஆக்சிடெண்ட் ஆகி உயிரை விட்ட பிணங்கள் கிடந்தன.

இடம் போதாததால் தரையில் அரிசி மூட்டையை கிடத்தியிருக்கிற மாதிரி மூலைக்கு மூலை கிடத்தியிருந் தார்கள். அவைகளை தாண்டித் தாண்டி நடந்த வாசு குறிப்பிட்ட ஒரு பிணத்தின் துணியை அகற்றி விட்டு முகத்தைப் பார்த்தான்.

முதல் நாள் மாலையில் நடு வீதியில் சாரங்கன் கோஷ்டியால் குத்திக் கொல்லப்பட்டு உயிரை விட்டிருந்த மெடிக்கல் ரெப் மோகனின் பிணம் அது!

அந்த பிணத்தையே சில விநாடிகள் உற்றுப்பார்த்தவன் அதன் பின் பிணத்துக்கு பக்கத்தில் பிணத்தைப் போலவே காலை நீட்டிப் படுத்தான். அருகில் கிடந்த ஒரு வெள்ளைத் துணியையும் எடுத்துப் போர்த்திக் கொண்டான். சில நிமிடங்கள் கரைந்தன. ஒரு அதிசயம் போல மோகனின் பிணம் அசைய ஆரம்பித்தது. பின் தூக்கத்தில் இருந்து எழுந்திருப்பது போல எழுந்தும் அமர்ந்தது! நின்றது. பின் நடந்து வெளியேற ஆரம்பித்தது.

மார்ச்சுவரிக்கு வெளியே வந்தபோது ஸ்வீப்பர் நாற்காலியில் இருந்து லேசாக கண் திறந்து பார்த்தான். மோகனைப் பார்த்து அப்படியே விக்கித்துப் போய் நிற்க, மோகனும் நடந்து வெளியேறினான்.

ஸ்வீப்பருக்கு தான் பார்ப்பது கனவா இல்லை நனவா என்றே தெரியவில்லை. சற்று தூரம் சென்ற மோகனும் திரும்பி ஒரு பார்வை பார்த்தான். ஸ்வீப்பருக்கு மயக்கமே வந்து விட்டது.

அந்த நள்ளிரவில் சாரங்கன் கோஷ்டி என்று தெருப் பெரியவர் ஒருவரால் வர்ணிக்கப்பட்ட ரவுடிகள் ஒரே கூத்தும் கும்மாளமுமாக இருந்தனர்.

இருந்த இடம் ரயில்வே லைனை ஒட்டிய ஒரு பாழடைந்த பங்களா!

அவர்களிடம் ஒரு விலை மாது அகப்பட்டிருந்தாள். படாதபாடு பட்டுக் கொண்டிருந்தாள். ஊடே அந்த பங்களாவுக்குள் யாரோ நுழையும் சப்தம் கேட்டு அத்தனை பேரும் திரும்பிப் பார்த்தனர்.

மோகன் நின்று கொண்டிருந்தான்!

அவனைப் பார்த்தவர்களுக்கு தூக்கி வாரிப் போட்டது. குப்பென்று வியர்வையும் பெருகியது.



"டேய்... இவன் அந்த மெடிகல் ரெப் இல்ல."

"அதான்... செத்தவன் எப்படி நேர்ல வர முடியும். மார்ச்சுவரில பாடியை வெச்சருக்கறதால்ல சப்இன்ஸ்பெக்டர் சொன்னான்..."

"ஒருவேளை நம்பள சமாதானப்படுத்தவும் சமாளிக்கவும் டாஸ் உட்றுப்பானோ...?"

"டேய் இப்ப எதுக்குடா அந்த ஆராய்ச்சி, போய் என்னான்னு கேளுங்கடா..." கோஷ்டியில் ஆளுக்கு ஆள் பேச ஒருவன் கையில் கத்தியோடு அந்த ரெப் இளைஞனான மோகனை நோக்கி நடந்தான்.

மோகனோ குத்துப்பார்வையும் அதில் கொலை வெறியுமாய் அவர்களைப் பார்த்தபடியே நின்றான்.

கிட்டே நெருங்கிய ரவுடிக்கு ரெப்பை அந்த கோலத்தில் பார்த்தது என்னவோ செய்தது.

"என்னடா முறைக்கறே... அப்ப குத்துனதுல உன் உசுர் போகலையா. அதான் திரும்ப குத்து வாங்க தேடி வந்துருக்கியா?"

கேட்டபடியே கையை ஓங்கினான். ஆனால் முந்திக் கொண்டது மோகனின் கரங்கள். ரவுடியின் வயிற்றில் ஒரு கட்டாரி நுழைந்து பின் முதுகில் நுனியைக் காட்டியபடி ஏறி நின்றது. அவன் உடலும் சரிந்து கீழே விழுந்தது.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த மற்றவர்களுக்கு ட்ரான்ஸ்ஃபார்மரில் கை வைத்தது போல ஷாக் அடித்தது.

"டேய் நம்ம ஆளையே குத்திட்டான்டா..." என்றபடியே ஒருவருக்கு இருவர் கத்தியோடு அவன் முன்னால் வெகு வேகமாக வந்தனர். வந்து நிற்கும் முன் இருவர் கழுத்திலும் மாறி மாறி ஒரு மாய வாள் வந்து வீசிச் சென்றது போல குற்றுயிரும் குலை உயிருமாய் அவர்களும் விழுந்தனர்.

மீதமுள்ள நான்கு பேரும் அந்த விலை மாதும் நடுங்கிப் போய் விட்டனர்.

மோகனின் பார்வை அந்த ஐந்து பேரில் தன்னை குத்திய பீட்டர் எங்கே என்று தேடியது. பீட்டரோ போதை வடிந்த நிலையில் திருதிருவென்று விழித்துக் கொண் டிருந்தான். அவனை இனம் கண்டு கொண்ட மோகனும் தன் பேண்ட் பாக்கெட்டில் கையை விட்டு ஒரு கட்டா ரியை எடுத்து அசுர வேகத்தில் அவனை நோக்கி எறிய அது கனகச்சிதமாக கழுத்தில் பாய்ந்து அவனை அப்ப டியே சாய்த்தது.

"பேய் ஓடுங்கடா..." மற்ற நாலு பேரும் தப்பித்தால் போதும் என்று அங்கிருந்து ஓடத் தொடங்கினர்.

அந்த விலைமகளோ அப்படியே மயங்கிச் சரிந்து விட்டாள்!

"வாசு வேண்டாம்... வேண்டாம். வந்துடு... வந்துடு..."

தூக்கத்தில் அலறிக் கொண்டு எழுந்திருந்தார் விஸ்வ நாதன்.

விடிந்து விட்டிருந்தது.

அவர் போட்ட சப்தம் மங்களத்தையும் எழுப்பியது.

"என்னன்னா... என்ன... கனவா?"

"ஆமாம் மங்களம். நம்ம வாசு நம்ம ஆத்தை விட்டுப் போய் செத்துப் போன ஒரு மெடிகல் ரெப்போட உடம் புக்குள்ள பூந்துண்டு தன்னைக் கொலை செய்த ரவுடி களை பழிவாங்கற மாதிரி ஒரு கனவு... ச்சே... என்ன ஒரு கொடுமையான கனவு..."

தலையை உதறியபடி கண்களைக் கசக்கிக் கொண்டார் விஸ்வநாதன்.

"என்னன்னா இது உளறல். எங்கையாவது ஒருத்தர் இன்னொருத்தர் உடம்புல நுழைய முடியுமா? சரி சரி... கனவுதானே... அதுக்கு விவஸ்தை ஏது?" என்று கேட்டபடியே படுக்கையை விட்டு எழுந்திருந்தாள்.



விஸ்வநாதனும் வேகமாய் எழுந்து நேராக வாசுவை அடைத்து வைத்திருந்த அறைப் பக்கமாய் சென்று எட்டிப் பார்த்தார்.

உள்ளே வாசு சங்கிலிப் பிணைப்பில் தன்னை மறந்து உறங்கிக் கொண்டிருந்தான்.

விஸ்வநாதனிடம் அப்பாடா என்கிற பெருமூச்சு.

"என்னன்னா... கண்டது கனவா இல்லை நனவான்னு ஒரு டவுட்டா...?"

"ஆமாம் மங்களம். ஏதோ சினிமாவுல வர்ற மாதிரி என்ன ஒரு ரௌத்ரம் தெரியுமா...?"

"சினிமாவுல கொலை வரும். கூடு விட்டு கூடு பாயற மாதிரி எல்லாமா வரும்?"

"நம்ம வாசுதான் அஷ்டமா சித்தியெல்லாம் தெரிஞ்சவ னாச்சே. அதான் கனவுல அப்படி வந்துடுத்து. சரி. சரி. வென்னீர் போட்டு வை. நான் மார்னிங் வாக் போய்ட்டு வந்துட்றேன்."

மங்களத்திடம் பேச்சு கொடுத்தபடியே விஸ்வநாதன் ஒரு சாட்ஸையும், டி ஷர்ட்டையும் அணிந்து கொண்டு வாக் போவதற்காக வெளியே கிளம்பினார்.

மெயின் கேட்டைத் தாண்டும் போது கூடவே வந்து சேர்ந்து கொண்டார் நள்ளிரவில் ஷிப்ட் முடிந்து வந்திருந்த அருணாசலம் என்பவர்.

"என்ன சார். வாக்கிங் புறப்பட்டாச்சா?"

"ஆமாம். அருணாசலம். இந்த நேரத்துல வாக்கிங் போகாம கோர்ட்டுக்கா போவேன். பாத்தா தெரியல?"

"அட என்ன சார் நீங்க... ஒரு பேச்சுக்கு கேட்டா, ஆமா. உங்க மகனை ராத்திரி வெளிய பார்த்தேனே... எங்க செகண்ட் ஷோ போய்ட்டு வந்தானோ?"

அருணாசலம் கேட்டது விஸ்வநாதனை காலரைப் பிடித்து இழுத்தது.

"என் மகனை வெளிய பாத்தீங்களா?"

"ஆமாம் சார். ராத்திரி பன்னிரெண்டு மணிக்கு டியூட்டி முடிஞ்சு வந்தப்போ என்னைத் தாண்டி போய்க்கிட்டிருந்தான். ஏற்கனவே ஒரு மாதிரி கேஸ்னு கேள்விப்பட்டதால எங்க போறேன்னு கேட்க தயக்கமா இருந்தது."

"இருக்காது அருணாசலம். அவன் சங்கிலியால கட்டப்பட்ட நிலைல வீட்லதான் இருக்கான்."

"என்ன சார்... அப்ப நான் பொய் சொல்றேனா?"

"நிச்சயமா... பூட்டின சாவி பூட்டினபடி இருக்கு. இப்ப கூட பாத்துட்டு தானே வரேன்."

விஸ்வநாதனின் கேள்வி அருணாசலத்தை நிறையவே யோசிக்க விட்டது.

அதன்பின் எதற்கு வம்பு என்று அவரும் வாக பற்றி பேசவில்லை. ஆனாலும் தான் பார்த்தது கனவா... நனவா என்கிற கேள்வி அவருக்குள் பிறாண்டியபடி தான் இருந்தது. வாக்கிங்கும் மௌனமாய் நீண்டு கொண்டிருக்க ஒரு பெட்டிக் கடையை கடக்கும் போது அங்கே ஒரே கூட்டம்!

விசாரித்தபோது யாரோ வாயினுள் கையை விட்டு இதயத்தைப் பிடுங்கினது போல இருந்தது விஸ்வநாதனுக்கு.

"சார் அந்த ரவுடிப் பசங்கள்ள நாலு பேரை கொலை செய்யப்பட்ட ரெப் பையனே ஆவியா வந்து குத்தி கொன்னுட்டானாம். மீதி நாலு பேர் தப்பிச்சு ஓடிட்டாங்களாம்."

"என்னய்யா கதையா இருக்கு. எப்படிய்யா சாத்யம் இது?"

"எப்படி சாத்யம்னா... மார்ச்சுவரி ஸ்வீப்பர்ல இருந்து. ஒரு தேவடியா வரை போலீஸ்காரங்ககிட்ட அப்படி தான் சொல்லியிருக்காங்க!"



"எது எப்படியோ... அந்த நாய்ங்களுக்கு நல்ல முடிவு தான் ஏற்பட்டிருக்கு. போலீஸ் நிச்சயமா அவங்களை பிடிச்சு தண்டிக்கப் போறதில்ல. இப்படி ஆவியோ பூதமோ இல்ல யாரோ வந்து கொன்னதும் நல்லதுக்குதான்னு வையுங்களேன்."

டீக்கடை முன் ஆளுக்கு ஆள் விதம் விதமாக பேசிக் கொண்டார்கள். விஸ்வநாதனுக்கு தனது கனவு தான் ஞாபகத்துக்கு வந்தது. கோவில் பிராம்மணர் சொன்னதும் நினைவில் முந்தியது. அதன்பின் ஒரு விநாடி கூட தாமதிக்கவில்லை. விழுந்தடித்துக் கொண்டு அவரைப் பார்க்கத்தான் ஓடினார்.

## 11

**கோவில்!**

மூச்சிரைக்க ஓடி வந்த விஸ்வநாதனை கல்மண்டபத்தில் அமர்ந்திருந்த பிராம்மணர் பார்த்துவிட்டு, "நீ இப்படி ஓடி வருவேன்னு எனக்கு நன்னா தெரியும்!" என்று சிரித்தார்.

"நான் இப்ப பெரிய குழப்பத்துல இருக்கேன். ராத்திரி ஒரு கனவு. அந்த கனவுப்படியே வெளியிலயும் சம்பவங்கள் நடந்துருக்கு. அதுல என் பிள்ளைதான் எல்லா கொலையையும் செய்தவன். இது எப்படி சாத்யம்? பெரியவாதான் சொல்லணும்." திக்கித் திணறி வேக விறுவிறுப்போடு அந்த பெரியவரின் கையைப் பிடித்துக் கொண்டு கேட்டார் விஸ்வநாதன்.

"நான்தான் சொன்னேனே... எட்டு நாள் பொறு. எல்லா விஷயமும் உனக்கு புரிஞ்சிடும்!"

"இப்படி சொன்னா எப்படி? என் பிள்ளை என் வீட்ல இருந்தா மாதிரியும் இருக்கு. வெளிய போய் அவனை

கொன்ன மாதிரியும் இருக்கு. இதெல்லாம் எப்படி சாத்யம்?"

"கனவுக்கு எதுக்கு இத்தனை முக்கியத்துவம் கொடுக்கறே. போ... போய் வேலையைப் பார். உன் பிள்ளை சங்கிலியை மட்டும் அவுத்துடாதே."

"எனக்கு ரொம்ப பயமா இருக்கு. என் பிள்ளை ஒண்ணும் இந்த கொலையை பண்ணலியே...?"

"பண்ணினாத்தான் என்ன... அவன்தான் பண்ணினான்னு உனக்குத்தானே தெரியும். ஊருக்கும் சட்டத்துக்கும் செத்துப் போனவன் ஆவிதானே வந்து கொலைகளை செய்திருக்கு"

"ஆமா... அப்படித்தான். ஒரு வக்கீலான நானே டென்ஷன்ல இதை யோசிக்காம போய்ட்டேன். சாரி... வெரி சாரி..."

"போய் சோலியப் பார். ஒன்பதாம் நாள் வா."

"வரேன். கட்டாயமா வரேன். அப்ப எல்லா புதிருக்கும் பதிலைச் சொல்லிடுவேள் தானே?"

"நான் என்ன சொல்றது. உனக்கே தெரிஞ்சிடும். இன்னும் நாலு பேர் இருக்காளே. அவாள சம்காரம் பண்ண வேண்டாம்."

"அப்ப... அப்ப... அவாளையும் என் பிள்ளைதான் கொலை பண்ணப் போறானா?"

"பதட்டப்படாதே வில்வநாதா. தைரியமா திடமா இரு. உன் பிள்ளை நீ நினைக்கற மாதிரி உன் பிள்ளை மட்டும் இல்லை. அவன் இப்ப அந்த சக்தியோட பிள்ளை. அவளோட ஆயுதம் அவன்.

அவனுக்கு பிரக்ஞை வந்தாலும் நான் நானல்லன்னு தான் சொல்வான். போ... போய் வேலையைப் பார். இன்னும் ஐந்து நாள் இருக்கு. அதுக்கப்புறமா வா!"



அந்த பிராம்மணர் சமத்காரமாக பேசி வில்வநாதனை திருப்பி அனுப்பி வைத்தார். வில்வநாதனும் கொஞ்சம் ஆசுவாசப்பட்டவராக திரும்பி சென்றார்.

ஆனால் வேறு எந்த வேலையிலும் தான் மனம் செல்ல வில்லை. வீட்டை விட்டும் வெளியேறவே பிடிக்காதபடி ஒரு பயம்.

மங்களமும் அவர் குழப்பத்தையும், தவிப்பையும் பார்த்து அவருக்குத் துணையாக கூடவே இருந்தாள். அவர்கள் பார்வை வாசலின்மேல் தான் இருந்தது.

மூன்றாம் நாள்!

நான்காம் நாள்!

ஐந்தாம் நாள்!

நாட்கள் தான் நகர்ந்தன. ஆக்ரமித்த டென்ஷன் விலகவில்லை. வெளியே பத்திரிகை டி.வி சகலத்திலும் ரெப்ரெசன்டேடிவ் மோகனின் ஆவி வந்து கொலை செய்தது பற்றி ஒரு பட்டி மண்டபமே நடந்து கொண்டிருந்தது.

அது மோகனில்லை... மோகனைப் போல் யாரோ... இல்லை மோகன்தான். அநியாயமாக உயிரை விட்டவர்களுக்கு ஒரு பழி வாங்கும் சக்தி உண்டு என்று விதம் விதமாய் கருத்துக்கள். இந்த நிலையில் ஆறாம் நாள் இரவில்...

அந்த ரவுடிகளில் மீதமுள்ள நான்குபேரும் ஒரு மலையடிவாரத்தில் ஒரு மரத்தடியில் முகாமிட்டிருந்தனர். அவர்களில் ஒருவனான ரஞ்சன் என்பவன் பசிக்கிறது சாப்பிட ஏதாவது வாங்கி வருகிறேன் என்று அவர்கள் வசம் உள்ள ஒரு ஜீப்பில் ஏறி டவுன் பக்கம் செல்லத் தயாரானான்.

"பாத்துப் போய்ட்டு வாடா... அந்த ஆவிப்பய கண்ணுல பட்டுடப் போறே?" என்கிற வழி அனுப்பு தலோடு.

"அதான் அவன் உடம்பை புதைச்சுட்டாங்களே. எங்க இருந்து வரும் ஆவி..." என்றபடியே ரஞ்சனும் ஜீப்பினைக் கிளப்பினான்.

ஊர் எல்லையிலேயே வாங்க வேண்டியதை வாங்கிக் கொண்டு திரும்பும் போது ஒரு கறுப்பு நாய் ஒன்று குறுக்கிட்டு ஜீப்பில் அடிபட்டு தூக்கியும் எறியப்பட்டது.

"தூத்தேறி பாஞ்சசேத்... நீ சாவ என் வண்டிதானா கிடைச்சிச்சு..." என்று செத்து விழுந்த அந்த நாயைப் பார்த்து கத்தி விட்டு ஜீப்பையும் கிளப்பிக் கொண்டு போயே போய் விட்டான்.

எப்பொழுது திரும்பி வருவான் என்று காத்திருந்த சகாக்களும் அவன் வாங்கி வந்ததைப் பிடுங்கித் தின்றார்கள்.

பக்கமாய் ஓடை ஒன்று ஓடிக் கொண்டிருந்தது. அதில் போய் கையால் அள்ளி தண்ணீரும் குடித்தார்கள்.

ரஞ்சனும் தண்ணீரைக் குடித்து விட்டு முகத்தையும் கழுவிக் கொண்டு நிமிர்ந்தபோது ஓடையின் மறு கரையில் ஒரு உறுமல் சப்தம் பகீரென்று.!

வரும்போது காரில் அடிபட்டுச் செத்துப் போன அதே கறுப்பு நாய்.

அவன் பார்த்து அச்சப்பட்ட மறுநொடி அது ஒரே பாய்ச்சலாக அவன் மேல் பாய்ந்தது.

"டேய் வாங்கடா... காப்பாத்துங்கடா..."

அவன் அலறல். நாலாபுறமும் எதிரொலிக்க சகாக்களும் ஓடி வந்து அதனிடம் கடிபட...

"வாசு வேண்டாம் வந்துடு... வந்துடு..." தூக்கத்தில் இருந்து அலறிக் கொண்டு கண் விழித்தார் விஸ்வநாதன். எழுந்திருந்த நொடி ஓடிப்போய் அறையைத்தான் பார்த்தார். வழக்கம் போல ஆழ்ந்த தூக்கத்தில் வாசு. கதவைத் திறந்து கொண்டு அருகே சென்று தொட்டுப்

18 MAY 2004



பார்த்தபோது பகீரென்று அவன் உடம்பில் உயிர் இல்லை!

'மங்களமும் வந்து பார்த்துவிட்டு அழ ஆரம்பித்து விட்டாள்.'

"ஐயோ... என்னன்னா இது... நம்ம வாசு நம்மை எல்லாம் விட்டுட்டு போய்ட்டானா?" அவளது அலறல் அக்கம் பக்கத்தை எல்லாம் கூட இழுக்கும் போல தோன்றவே சட்டென்று எகிறி அவளது வாயைப் பொத்திய விஸ்வநாதன்.

"கத்தாதே மங்களம். வாசு சாகலை. அவன் இப்ப கூடு மாறியிருக்கான்... வந்துடுவான் கொஞ்ச நேரத்துல."

என்னன்னா சொல்றேள். நம்பறா மாதிரி சொல்லுங்கோ..."

"இதோ பார் யார் நம்பறாளோ இல்லையோ நீயும் நானும் இதை நம்பித்தான் தீரணும். அந்த பிராம்மணர் சொன்னது பரமானந்தர் சொன்னது எல்லாத்தையும் கூட்டி கழிச்சுப் பாக்கறேன்.

வாசு யார்னு தெரிஞ்சு போச்சு. அவன் அந்த தேவியோட அம்சம். அவளோட ஆயுதம். அவன் பண்ண ஏதோ ஒரு தப்பு அவனை சித்த பிரமைக்கு ஆளாக்கிடுத்து. இருந்தாலும் அவனோட விசேஷ அஷ்டமா சித்தி சக்திகள் இந்த உலகத்துக்கு ஏதோ ஒரு வகையில் பயன் பட்டுண்டு வரது. அதை நான் உணர்ந்த அளவு கூட யாராலயும் உணர முடியாது. இதுக்கு மேலயும் வாசுவை பத்தி தெளிவா தெரிஞ்சுக்கணும் அவனைப் புரிஞ்சுக்கணும்னா அது அந்த வேதப் பிராம்மணர் சொல்றதுலதான் இருக்கு. எது எப்படியோ... அந்த ரவுடிக் கூட்டம் ஒழிஞ்சுது." சக்தி சம்ஹாரம் எப்படி வேணும்னாலும் நடக்கும்னும் நான் தெரிஞ்சுண்டேன்.

கொஞ்ச நாழியில் பார். நம்ம பிள்ளையோட ஆத்மா திரும்ப இந்த உடம்புக்குள்ள வந்து நுழையும். அதை நீ பாரப்பே."

விஸ்வநாதன் சொல்லி வாய் மூடவில்லை. வாகனின் உடலில் அசைவு. மங்களம் அப்படியே விக்கித்துப் போனாள்.

"என்னா இதெல்லாம் கனவில்லையே... நிஜம்தானா?"

"சத்யமா நிஜம். ஆனா நமக்கு மட்டும் தான். வெளிய சொன்னா சிரிப்பா..."

"யார் சிரிக்கறதைப் பத்தியும் எனக்கு கவலையில்லை. எனக்கு என் பிள்ளை நல்ல விதமா தெளியணும். வாங்கோ அந்த பெரியவரையே போய் பார்த்து விசாரிப்போம்..."

மங்களம் அவரை இழுத்துக் கொண்டு ஓடினாள்.

முற்றும்

குறிப்புதவிநூல்

CONNEMARA PUBLIC LIBRARY
1 8 MAY 2001
CHENNAI-600 008